விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 04 திங்கட்கிழமை (18.05.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 150

# பாதுகாப்பு வலயத்திலிருந்து மக்கள் முற்றாக வெளியேற்றம்


## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் பாதுகாப்பு வலயப் பிரதேசத்திலிருந்து மக்கள் முற்றாக வெளியேற்றப்பட்டிருப்பதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது. புலிகள் நேற்றுக் காலையில் மேற்கொண்ட தாக்குதல் முயற்சி ஒன்றும் முறியடிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தர சமாதானம் ஏற்பட பாப்பரசர் பிரார்த்தனை



(ரோம்)

இலங்கை தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டு நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என பிரார்த்தனை செய்வதாகவும் பரிசுத்த பாப்பரசர் 16-வது பெனடிக் தெரிவித்துள்ளார்.

இலங்கை நிலைவரம் தொடர்பாக தான் கவலை கொண்டுள்ளதாகவும் பாப்பரசர் கவலை வெளியிட்டுள்ளார்.

மோதல் பிரதேச மக்களுக்கு (12ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காக துப்பாக்கிகளை மௌனமாக்கியுள்ளோம்

## புலிகளின் பேச்சாளர் அறிவிப்பு



(கொழும்பு)

மக்களை பாதுகாப்பதற்காக தமது துப்பாக்கிகளை மௌனமாக வைத்திருப்பதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் இது குறித்து சர்வதேசத்துக்கு தாம் அறிவித்துள்ளதாகவும் விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.


கடந்த 24 மணி நேரத்தில் 3 ஆயிரம் மக்கள் வீதிகளில் கொல்லப்பட்டிருக்கும் அதே வேளையில் கடுமையாக காயமடைந்த 25 ஆயிரம் பேர் மருத்துவ பராமரிப்புக்கள் எதுவும் இல்லாமல் அங்குள்ளார்கள். எமது மக்களை பாதுகாப்பதே இப்போதுள்ள அவசரமான பணியாகும் எனவும் அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அவசர அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இதனைக் கவனத்தில் கொண்டு எமது மக்களை பாதுகாப்பதற்காக எமது (02ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில்லான பயணிகள் கப்பல் சேவை இன்று திங்கட்கிழமை நடைபெறும் என அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் மே மாத 4-வது கப்பலிற்கான அனுமதிச் சீட்டினை (TOKEN) பெற்றுக் (12ஆம் பக்கம் பார்க்க)



## கொழும்பு திரும்பிய ஜனாதிபதி தாய்நாட்டை தலைவணங்கினார்

(கொழும்பு)

ஜோர்தானிற்கு ஜீ-11 நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை நாடு திரும்பினார். விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கியதும் ஜனாதிபதி விமானத்திலிருந்து இறங்கி நிலத்தில் தலைவைத்து தாய்நாட்டை வணங்கினார்.

இதனையடுத்து ஜனாதிபதிக்கு (12ஆம் பக்கம் பார்க்க)

## நாளை முதல்...

- முன்னணி ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்ட 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத் தாள்.
- பிரபல சோதிடர் சோதிட கலாமணி **சிவல்புரி சிங்காரம்** எழுதும் புத்தாண்டில் உங்கள் மேமாதப் பலன்கள்.

## பயங்கரவாத ஒழிப்பை விடுத்து மக்களின் உயிரைக் காப்பாற்றுங்கள்

### பிரிட்டிஷ் அமைச்சர் வேண்டுகோள்

(லண்டன்)

இலங்கையில் தற்பொழுது மனித பேரவல நிலை காணப்படுகின்றது என கூறியுள்ள பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபான்ட் இலங்கை அரசாங்கம் முதலில் அந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர்,

ஐ.நா. செயலருக்கு நான் என்ன சொனேன் என்றால், அங்கு மனித உயிர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். அங்கு காப்பாற்றப்பட (02ஆம் பக்கம் பார்க்க)

## கால்பந்து மைதானத்தளவு புதர்ப் பகுதிக்குள் புலிகள்!

### பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கம் என்ற அமைப்பே இனிமேல் கிடையாது. நாங்கள் பொதுமக்களையும் மீட்டுவிட்டோம். ஒரு கால்பந்து மைதானமளவுள்ள முட்புதர்கள் நிறைந்த காட்டுப் பகுதியே (12ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழ் மக்கள் தொடர்பில் இந்தியா கவலை கொண்டுள்ளதாம்

### நாராயணன் சொல்கிறார்

(புதுடில்லி)

இலங்கையில் இறுதிக் கட்டப்போர் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில் அங்குள்ள தமிழர்கள் தொடர்பில் இந்தியா கவலை கொண்டிருப்பதாக இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் தெரிவித்துள்ளார்.

போரில் சிக்கியுள்ள தமிழர்களின் நிலை குறித்து இலங்கை அரசுடன் இந்தியா தொடர்பு கொண்டு வருவதாகவும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நிலை குறித்து இலங்கை அரசிடமிருந்து இந்தியாவுக்கு எந்தவித தகவலும் வரவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக . (12ஆம் பக்கம் பார்க்க)

"கெட்டிமேளம் திருமண சேவை"
உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை
விரைவாகவும் விரும்பியபடியும் செய்துகொள்ள
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். E-MAIL: moorthydigital@gmail.com

# இரண்டு சதுர கிலோமீற்றர் பகுதியில் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

## புலிகள் நேற்று தெரிவித்ததாக செய்திகள் வெளியீடு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் இரண்டு சதுர கிலோமீற்றர் பகுதியிலேயே தற்போது கடுமையான போர் நடைபெற்று வருவதாகவும் இப்பகுதியில் பெரும் தொகையான மக்கள் கொல்லப்பட்டு உடல்கள் குவியல் குவியலாகக் காணப்படுவதாகவும் கடற் புலிகளின் சிறப்புத் தளபதி சூசை தெரிவித்திருக்கின்றார்.

படையினரின் ஆட்டிலறி தாக்குதலில் படுகாயமடைந்த சுமார் 25 ஆயிரம் பேர் மருத்துவப் பராமரிப்புக்கள் எதுவும் இல்லாமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலையில் மரணமடைந்திருப்பதாகவும் சூசை நேற்று ஞாயிற்றுக்கிழமை சர்வதேச ஊடகங்களுக்காக தொலைபேசியில் தகவல் தெரிவித்தார்.

படுகாயமடைந்த இந்த 25ஆயிரம் பேரையும் இரட்டைவாய்க்கால் அல்லது வட்டுவாகல் பகுதி ஊடாக வெளியே கொண்டு வருவதற்கு அனைத்துலகப் பொறுப்பாளர் செ.பத்மநாதன் மூலமாக அனைத்துலக செஞ்சிலுவைச்சங்கத்திடம் நாம் கோரிக்கை முன்வைத்தோம்.

ஜெனீவாவில் உள்ள அனைத்துலக செஞ்சிலுவைச்சங்கத்திடம் கேட்டுக் கொண்டோம். நாம் அவர்களை அனுப்பிவைக்கின்றோம் நீங்கள் பொறுப்பு எடுங்கள் எனக் கேட்டோம். இருந்த போதிலும் அதற்கு உரிய பதில்கிடைக்கவில்லை.

இந்நிலையில் அந்த 25ஆயிரம் மக்களும் மருத்துவ சிகிச்சைகள் இல்லாமல் மரணமடைந்திருக்கின்றனர்.

சுமார் இரண்டு கிலோ மீற்றர் சதுர நிலப் பரப்புக்குள் பெரும் தொகையான உடல்கள் குவியலாகவும் சிதறுண்டும் காணப்படுகின்றது. ஏனையவர்கள் தாக்குதலுக்கு அஞ்சி பதுங்கு குழிகளுக்குள்ளேயே இருக்கின்றனர்.

இங்கு என்ன நடை பெறுகின்றது என்பதையிட்டு எந்தவிதமான அக்கறையும் இல்லாததாகவே அனைத்துலக சமூகம் இருக்கின்றது. தற்போது படுகாயமடைந்திருக்கும் 25ஆயிரம் மக்களைவிட மேலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

நாம் படையினருடன் தொடர்ந்தும் சண்டையிட்டுக்கொண்டுதான் இருக்கின்றோம். இறுதிவரையில் நாம் அடிபணியப் போவதில்லை. கடுமையான சண்டை நடை பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. அதற்குள் பொது மக்களும் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் எனவும் சூசை குறிப்பிட்டார்.

அனைத்துலக சமூகம் திரும்பிப் பார்க்கவில்லை. நாங்கள் 13ஆம் திகதி இரவு தொடக்கம் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அந்த 25 ஆயிரம் மக்களையும் எடுக்கச் சொல்லி, காலத்தைத் தாமதித்தார்கள்.

தற்போது இன்னும் 20ஆயிரம் மக்கள் வரையில் காயப்பட்டிருக்கின்றனர். அதனை விட மற்றவர்கள் அனைவரும் பதுங்கு குழிகளுக்குள் இருக்கின்றனர். படையினரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் அனைவரும் பதுங்குகுழிகளுக்குள் இருக்கின்றனர் எனவும் சூசை தெரிவித்தார்.

போர் இப்போது இறுதிக்கட்டத்தில் உள்ளது. இப்போது கடைசி மணித்தியாலச் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இரண்டு கிலோ மீற்றர் சதுர நிலப்பரப்புக்குள் பரவலாக ஆட்டிலறி தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கின்றனர் எனவும் சூசை தெரிவித்தார். (எ-5)

## இலங்கை மீது பொருளாதாரத் தடை; தயாராகிறது மேற்குலக சமூகம்

### கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

இலங்கை மீது பொருளாதார தடைகளை மேற்கொள்வதற்கு மேற்குலகம் முயற்சிகளை வேகமாக எடுத்து வருவதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த ஊடகத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

போர் நிறுத்தம் தொடர்பான அழைப்புக்களை இலங்கை அரசு நிராகரித்ததை தொடர்ந்து பல மேற்குலக நாடுகள் இலங்கை மீது பொருளாதாரத் தடைகளை மேற்கொள்ள முயற்சித்து வருகின்றன.

இலங்கை மீதான நடவடிக்கைகள் தொடர்பாக பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளர் டேவிட் மிலிபான்ட் மற்றும் பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் குஷ்னர் ஆகியோர் கடந்த வாரம் ஆராய்ந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சகத்தின் அலுவலக அமைச்சர் பில் ராம்மெல் இலங்கைக்கு காத்திரமான எச்சரிக்கை ஒன்றை கடந்த புதன்கிழமை விடுத்திருந்ததுடன் இலங்கை போர் குற்ற விசாரணைகளை எதிர் நோக்க வேண்டி வரும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

பிரித்தானிய நாடாளுமன்ற விவாதத்தின் போது பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை மீதான பொருளாதாரத் தடையை ஆதரித்திருந்தனர்.

பொருளாதார தடைகளை கொண்டு வருவதுடன் அதனை பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இருந்து நீக்கவும் இலங்கையுடனான இராஜதந்திர உறவுகளை நிறுத்தவும் அமைதி முயற்சிகளில் நேரிடையாக மேற்குலகம் தலையிடவும் பொருட்களை புறக்கணிக்கவும் அரச அதிகாரிகள் மீது பயணத் தடையை கொண்டுவரவும் அவர்கள் ஆதரவுகளை தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைக்கான புடைவை ஏற்றுமதி வரிச்சலுகையுடன் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கைகளை இணைத்துக் கொள்ள முற்பட்டு வருகின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காக...

துப்பாக்கிகளை மௌனமாக வைத்திருப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம் என்ற எமது நிலைப்பாட்டை உலகத்துக்கு நாம் ஏற்கனவே அறிவித்திருக்கிறோம் எனவும் இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் பத்மநாதன் மேலும் முக்கியமாகத் தெரிவித்திருப்பதாவது,

எமது மக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு உலகில் உள்ள நாடுகளை நாம் கேட்டுக்கொண்டிருந்தோம். ஆனால் எமது இந்தக் கோரிக்கை யாருடைய காதிலும் விழவில்லை.

போர் இடம்பெறும் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட தமிழர்களை பாதுகாப்பதற்கும் இராணுவத்தினரிடம் சரணடைந்த போராளிகள் மற்றும் பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்குமாறு அனைத்துலக சமூகத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த போர் கசப்பான ஒரு முடிபுக்கு வந்திருக்கின்றது. எமது மக்களின் முடிபில்லாத ஆதரவையும் உதவியையும் தவிர எமக்கு எந்த உதவியும் இல்லாத நிலையில் சிங்களப் படையினர் முன்னேறிய போது நாம் பின்வாங்க வேண்டியேற்பட்டது.

எமது மக்கள்தான் இப்போது குண்டுகளாலும் எறிகணைகளாலும் நோய்களாலும் பட்டினியாலும் மரணமடைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மேலும் பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது.

எம்மிடம் இப்போது கடைசியாக ஒரே தெரிவுதான் இருக்கின்றது. எமது துப்பாக்கிகளை மௌனிக்கச் செய்வதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். எமது அப்பாவி மக்களுடைய இரத்தம் தொடர்ந்தும் சிந்தப்படுவதை எம்மால் சகித்துக் கொள்ள முடியாது.

விடுதலைப் புலிகள் அமைப்பானது கடந்த மூன்று தசாப்த காலமாக இலங்கை இராணுவத்துடன் போரிட்டு, இந்த தீவில் வசிக்கும் தமிழர்களைப் பாதுகாப்பதற்கான ஆயுதங்களை வைத்திருப்பதற்கான உரிமையைப் பெற்றிருந்தது.

2002 ஆம் ஆண்டு நோர்வேயின் அனுசரணையுடன் தொடங்கிய சமாதான முயற்சிகளில் இருந்து ஒரு தலைப்பட்சமாக வெளியேறிய பின்னர் இந்த பிரச்சினையை முடிபுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் இராணுவத் தீர்வை நாடியது.

2007 ஆம் ஆண்டில் போர் தீவிரமடைந்த பின்னர் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் மரணமடைந்திருக்கின்றனர். வட பகுதியில் இராணுவம் தனது நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியதையடுத்து பெருமளவு தமிழர்கள் கொல்லப்பட்டுள்ள துடன் பட்டினியா லும் போதிய மருத்துவ வசதிகள் இல்லாமையாலும்மேலும் பலர்மரணமடைந்திருக்கின்றனர்.

இந்த கொடூர நிகழ்வுகளை நிறுத்துவ தற்கு எமது வரையறைக்கு உட் பட்ட எதனையும் செய்வதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

இது எமது ஆயுதங்களை மௌனிக்கச் செய்வதுடன் சமாதான நடைமுறைக்குள் பிரவேசிப்பதாக இருந்தாலும் அவற்றுக்கு நாம் ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருக் கிறோம்.

இன்றைய தருணத்தில் இது தான் தேவை. இதன்மூலமாக ஆயிரக்கணக்கான மக்களுடைய உயிர்களை பாதுகாக்க முடியுமாயின் அது செய்யப்பட வேண்டும்.

எமது மக்களுக்காகத்தான் நாம் போராடுகிறோம் என்பதை நாம் மறந்து விடவில்லை. தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில் எமது மக்கள் கொல்லப்படுவதை நியாயப்படுத்துவதற்கு இந்த போரை சிங்கள அரசு பயன்படுத்துவதை இனிமேலும் அனுமதிக்க முடியாது.

நாம் எமது துப்பாக்கிகளை மௌனிப்பதற்கு தயாராகவிருக்கிறோம். எமது மக்களை பாதுகாக்குமாறு அனைத்துலக சமூகத்திடம் தொடர்ந்தும் கோருவதை விட எம்மிடம் வேறு தெரிவுகள் எதுவும் இல்லை. இவ்வாறு பத்மநாதன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ச-5)

## பயங்கரவாத ஒழிப்பை...

வேண்டிய உயிர்கள் இன்னமும் இருக்கின் றன.

மக்களுக்கு சிகிச்சை வழங்கப்பட வேண்டி இருக்கிறது. உணவும் குடி நீரும் விநியோகிக்கப்பட வேண்டி இருக்கிறது. எனவே இந்த பிரச்சினை எல்லாம் இருக்கின்ற பொழுது ஒரு பயங்கரவாத இயக்கத்தை விட அதிகமாக உயர்தரத்தைப் பேண வேண்டிய ஒரு ஜனநாயக அரசாங்கம் அந்த மக்களின் நலனில் முக்கிய பொறுப்புக்களை கொண்டிருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

### றோகித போகொல்லாகம

இதேவேளை இன்னும் சிறிது காலத்துக்கு புலிகள் தாக்குதலை நடத்தினாலும் நீண்ட காலத்தில் அமைதி திரும்பி விடுமென்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளினால் மூளைச் சலவை செய்யப்பட்ட அவர்களது தற்கொலையாளிகள் இன்னும் சில காலத்துக்கு தமது மோசமான தாக்குதல்களை தொடருவார்கள். அந் நிலை விரைவில் மாறிவிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### ஜோன் ஹோம்ஸ்

இலங்கை தமிழர்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு காணப்படாவிட்டால் மீண்டும் கெரில்லாத் தாக்குதல் நடப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்று ஐ.நாவின் மனிதாபிமானப் பணிகளுக்கான தூதுவர் ஜோன் ஹோம்ஸ் எச்சரித்துள்ளார்.

இந்த இழப்புக்களும் வன்செயல்களும் ஒரு சமரசத்தை கொண்டு வருவதில் பெரும் சிரமத்தை ஏற்படுத்தும். தமிழர்களுக்கு பொருத்தமான ஒரு சுயாட்சியைக்கொண்டு வருவதற்கான ஒரு அரசியல் முயற்சி மூலமே சமரசத்தை ஏற்படுத்த முடியும்.

அப்படியில்லாவிட்டால் இந்த இராணுவ வெற்றி எந்தப் பயனையும் தராது என்றும் மீண்டும் கெரில்லாப் போர் ஒன்று தொடங்குவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. அரசாங்கம்போரில்வெல்லலாம். அது அமைதியைத் தொலைத்து விடுகின்ற அபாயம் இருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-14)

ஈசன் திருமண சேவை (பதிவு இல:VW/FIN/R/1/13/2008)
உள்நாடு/வெளிநாடுகளில் உள்ள வைத்தியர்கள்,பொறியியலாளர்கள்,ஆசிரியர்கள்,பல்வேறு அரச பதவியினர்,சொந்த தொழில்-வியாபார உரிமையாளர்கள் PR உடனும் இல்லாமலும் வெளிநாடுகளில் உள்ளவர்கள்,உட்பட போதியளவு மணமக்களில் தெரிவுகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
உ.அருளீசன்
வட்டு. வடக்கு,
வட்டுக்கோட்டை (புளியடிச்சந்தி)
TP:0712124350,
0778135952
(2712-இ)

# இன்று ஒரு தகவல்

# கண்ணீர்

ஒரு மனிதன் இந்த உலகத்துக்கு வந்து சேர்ந்தவுடன் செய்யும் முதல்காரியம் அழுகைதான்.

ஒரு குழுந்தை பிறந்தவுடன் அது ஆணா ? பெண்ணா? கறுப்பா ? சிவப்பா? என்று பார்ப்பதற்கு முன்னர் அது கத்துகிறதா , இல்லையா என்று பார்ப்பதுதான் முக்கியம்.

பிறக்கும் போது அழவேண்டும். போகும் போது மற்றவர்களை அழவைக்க வேண்டும். அப்படி இருப்பவன்தான் நல்ல மனிதன். வாழ்வாங்கு வாழ்வது என்பது இது தான் .

ஒருவன் மூச்சை விட்டவுடன்“அப்பாடா போய்ச் சேர்ந்தானா” என்று எல்லோரும் நிம்மதியாக மூச்சு விடுகிறார்கள் என்று வையுங்கள் அவன் நல்ல மனிதன் இல்லை.

அழுவதால் என்ன நன்மை என்று கேட்கிறீர்களா? உலக சுகாதார நிறுவனத்தில் (WHO) இருக்கும் மருத்துவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

அழுகை என்பது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு ஒரு வழி.... ஒருவடிகால் என்கிறார்கள். கண்ணீர் எப்பொழுது வரும்?

அதிக ஆனந்தத்திலிருக்கும் போதும் அதிக துன்பத்திலிருக்கும் போதும் வரும். எல்லோருக்கு ம் துன்பம் வருவது இயற்கை தான்.

சில சமயம் தாங்க முடியாத துன்பத்தையும் அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

ஆழ்ந்த துன்பத்திலிருக்கும் போது கண்ணீரை அடக்கி வைத்தால் அது நம் உடம்பில் கெடுதலை உண்டாக்குமாம்.

அமெரிக்க மனநோய் வைத்திய நிபுணர் டாக்டர் எரிக்லின்டர் இதற்கு ஒரு உதாரணம் சொல்கிறார்.

ஒரு இளம் மருத்துவ தாதி இருந்தார். அவருடைய அப்பாவுக்கு ஒரு தீராத நோய் அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தார்கள். அவருடைய மகளே அங்கு தாதியாக இருந்தபடியால் அவரை பக்கத்திலிருந்து கவனித்துக் கொண்டு வந்தாராம்.

திடீரென அவர் இறந்து விட்டார். இந்தப் பெண்ணுக்கு சரியான கவலை இருந்தாலும் தாதியாகவே இருந்து பழக்கப்பட்டதால் தனது துக்கத்தை மனதுக்குள்ளேயே அடக்கி வைத்திருந்தாராம். கடைசியில் என்ன ஆயிற்று தெரியுமா? அவருடைய அப்பா இறந்து நான்கு மணி நேரத்துக்குள் இவருக்கு வயிற்றுவலி ஏற்பட்டு இந்தப் பெண்ணும் இறந்துவிட்டதாம்.

நமது ஊர்களில் கூலிக்கு மாரடிக்கிறது என்று ஒரு பழமொழி இருக்கிறது. கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சில இடத்தில் யாராவது இறந்து போய்விட்டால் அதற்கு ஒப்பாரி வைக்க பணம் கொடுத்து ஆட்களைக் கூட்டிக் கொண்டு வருவதுண்டு. அதற்கென்று சிலர் இருக்கிறார்கள்.

ஏன் இப்படி செய்கிறார்கள் என்று நினைக்கிறீர்களா? இறந்து போனவர்களுக்கு நெருங்கிய உறவினர்கள் இருப்பார்கள்; அவர்கள் துக்கத்தை அடக்கி வைத்துக் கொண்டிருப்பார்கள்... அப்படி யாராவது இருந்தால்... அவர்கள் ஒப்பாரிக்காரர்களைப் பார்த்ததும் அழுது விடுவார்கள் மனதிலுள்ள பாரம் குறையும் அது தான் விஷயம்.

கண்ணீரை அடக்கி வைத்தால் என்னென்ன விளைவுகள் வரும் என்று கண்டு பிடித்து சொல்லியிருக்கிறார்கள்.

ஆஸ்த்மா வரலாம்!

ஒற்றைத் தலைவலி வரலாம்!

அதனால் கண்ணீரை பற்றிய ஆராய்ச்சியெல்லாம நடந்து கொண்டிருக்கிறது.

சர்வதேச மருத்துவக்குழு ஒன்று என்னசொல்கிறது தெரியுமா?

மன அழுத்தம் குறையவேண்டுமானால் எல்லோரும் சேர்ந்து அழுங்கள். உயர் மன அழுத்தம் குடற்புண் இவையெல்லாம் கூட சரியாகி விடும் என்கிறார்கள். இன்னும் கொஞ்ச நாட்களில் ஆஸ்பத்திரிகளில் கூட அழும் பயிற்சி கொடுக்க தனிப்பிரிவே வரலாம் என்று சொல்கிறார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தேசிய இளைஞர் விருது வழங்கல் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் விருது வழங்கும் போட்டியில் வெற்றியீட் டியவர்களின் பெயர்விபரம் அறிவிக்கப் பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பாராட்டுச் சான்றிதழ்களையும் பெறுபவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**சிறுகதை**

எம்.எலிஸ் ஏஞ்சல்ஸ்–குருநகர், கே. சேந்தன் –இராசாவின் தோட்டம்,எம்.மதுரா–அல்வாய் வடக்கு.

**பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்**

சி.சிவகஜீபன்,பி.சே.திலக்மிலன்–யாழ். மத்திய கல்லூரி.

**கவிதை**

கே.சேந்தன் –இராசாவின் தோட்ட வீதி, ஏ.சதீஸ்வரன்–தெல்லிப்பளை கிழக்கு, எஸ்.ஜதுஸன்–உடுவில் கிழக்கு.

**பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்**

ஆ.கனிமொழி–உரும்பிராய் கிழக்கு, அ.ஜெரி ஜோன்ஸன் –குருநகர்.

**கட்டுரை**

வி.அகிலன்–அளவெட்டி வடக்கு, ஆர்.பிரணவன்–புலவனார் வீதி கல்வியங்காடு, என்.கார்த்திகா–கண்டி வீதி யாழ்ப்பாணம்.

**பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்**

இ.வினு –சிவன் பண்ணைவீதி, ந.நந்தகோபன் –மட்டுவில் வடக்கு.

**பாடல் இயற்றுதல்**

தெ.சந்திரகுமார் –மானிப்பாய் வீதி, அ.சத்தியன் –ஏழாலை மத்தி, அ.ஜெரிஜோன்சன் –குருநகர்.

**பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்.**

ஜே.றுபின்சலா–புதுவீதி கொய்யாத்தோட்டம்,சி.அஜந்தன்–நவாலி.

**அறிவிப்பாளர்**

எஸ்.நிகோஸ் –அராலி தெற்கு, தெ.சந்திரகுமார்–மானிப்பாய் வீதி, ரி.விதுர்சன்–கொக்குவில் கிழக்கு.

**கிராமியப் பாடல்**

ரி.திவ்வியாஞ்சலி–மணல்தறை ஒழுங்கைகந்தர்மடம், எஸ்.விருசன்–நொத்தாரிஸ்லேன்– அரியாலை,வை.காண்டீபன்–ஏ.வி.றோட் அரியாலை.

**இளம் பாடகர்**

ரி.திவ்வியாஞ்சலி–மணல்தறை ஒழுங்கை கந்தர் மடம்,எஸ். விருசன்–நொந்தாரிஸ்லேன் அரியாலை, கே. துவாரகன்–வரணி வடக்கு.

**தவில்**

எஸ்.செந்தில்நாதன் –சட்டநாதர் ஒழுங்கை நல்லூர்,எஸ்.சரவணன் –கே.கே.எஸ்.றோட் யாழ்ப்பாணம், ரி.றமேஸ்-கலாசாலை வீதி திருநெல்வேலி.

**வயலின்**

ஆ.பிரவீணா–காட்டுக்கந்தோர் ஒழுங்கை,யாழப்பாணம்,வை.காண்டீபன் ஏ.விறோட் அரியாலை, பி.காயத்திரி–கே.கே.எஸ்.றோட் யாழ்ப்பாணம்.

**செக்ஸபோன்**

வை.காண்டீபன் –ஏ.வி.றோட் அரியாலை,வை.நவருபன்– ஏ.வி. றோட் அரியாலை,ஜி.பவித்திரன் – தாவடி தெற்கு.

**ஓகன்**

என்.அனோஜ் கிளமென்ஸன்–அப்பன்வீதி யாழ்ப்பாணம், தூ.ரேணுகா–திருமகள் வீதி அரியாலை, ம.சிவரோசன் –சிவன் கோவில் வீதி சித்தன்கேணி,

**பாராட்டு சான்றிதழ் பெறுவோர்**

ஜெ.ஐங்கரன் வட்டு தெற்கு.

**மௌன நடிப்பு**

எஸ்.நிசாந் –சாவற்கட்டு ஆனைக்கோட்டை,தெ. சந்திரகுமார் மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம் ,தெ.சேந்தா– ஈச்சமோட்டை ,எல்.சகாயதாஸ் –சுன்னாகம்.

**பரத நாட்டியம்**

பி.ஐவர்ணா–மஞ்சத்தடி –இணுவில்,கே.பவன்–அங்களப்பாய் இணுவில், எஸ்.சபேசன்–ஓடை லேன் வண்ணார்பண்ணை, எஸ்.நிரஞ்சலா –இணுவில் தெற்கு.

**கிராமிய நடனம்**


ரி.வாகீசன்–குழு கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம்

**சித்திரம்**

ஏ.ஜெயந்தினி–துர்க்கா மகளிர் இல்லம் தெல்லிப்பளை, ரி.பிரதீஸ் கண்ணா –கந்தர்மடம், எம்.கலாறஞ்சினி –இணுவில் மேற்கு.

**சிற்பம்**

எம்.அபிராம் –வதிரி கரவெட்டி, வை.காகுந்தன்– வட்டக்குளம் கட்டைப்பிராய்,பி.கோபிநாதன் –இளவாலை (6,4,36)



யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் 10ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது. அன்றைய தினம் கல்வியியல் ஆய்வாளர் பா.தனபாலன் எழுதிய நவீன கற்றல்-கற்பித்தல் முறையியல்கள் என்ற நூலை வித்தக விநாயக ஆலய பிரதம குரு சிவானந்த சிவாச்சாரியர் வெளியிட்டு வைக்க பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

*18.05.2009*
*(வைகாசி 4, திங்கட்கிழமை)*
*நவமி முன்னிரவு 11.35 மணிவரை*
*சதயம் முன்னிரவு 7.52 மணிவரை*
*இராகுகாலம் 7.23-8.53 மணிவரை*
*சுபநேரம் 11.53 - 1.23 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், உறவினர் வருகை,தனலாபம், உடல் நலம். |
| இடபம் | பிரபுத்தனம்,பெரியோர் உதவி, தொழில் முன்னேற்றம், முயற்சி பலிதம். |
| மிதுனம் | உத்தியோக பங்கம் , எதிர்பாராத செலவு, உறவினர் சந்திப்பு, பிரயாணம். |
| கடகம் | மனக்கவலை, காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு, வீண் பகை. |
| சிங்கம் | மனோ தைரியம்,சென்ற இடத்தில் செல்வாக்கு, தனலாபம், களஸ்திர நன்மை. |
| கன்னி | ஆரோக்கியம்,பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம்,சத்துரு ஜெயம். |
| துலாம் | மனச்சஞ்சலம்,கௌரவக்குறைவு, அதிக பிரயாசை,முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | தன்னம்பிக்கைக்குறைவு,புதிய விடயம்,பயணம் ,முயற்சி தாமதம். |
| தனுசு | சகோதாரர் வழி நன்மை, அந்நியா சந்திப்பு,காரிய அனுகூலம்,தனலாபம். |
| மகரம் | போசனசுகக்குறைவு,ரோக நிலை,மனோசங்கடம்,முயற்சி தாமதம். |
| கும்பம் | மாதர் நட்பு,போசன சுகம்,அதிக பிரயாசை,வெகுமானம். |
| மீனம் | சோம்பல் நிலை,பிறருக்கு உதவுதல்,முயற்சி தாமதம் ,தன விரயம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 110 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 55 |
| தக்காளி | 240 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 70 |
| கோவா | 40 | 50 | 35 |
| கரட் | 40 | 60 | 50 |
| பூசணி | 20 | 30 | 20-50 |
| புடோல் | 60 | 70 | 65 |
| வாழைக்காய் | 50 | 60 | 55 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 45 |
| பெரிய வெங்காயம் | 160 | 170 | -- |
| பாகற்காய் | 100 | 80 | 75 |
| வெண்டிக்காய் | 65 | 70 | 65 |
| கரணைக் கிழங்கு | 60 | 80 | 80 |
| பயிற்றங்காய் | 70 | 80 | 85 |
| லீக்ஸ் | 120 | 140 | 165 |
| பிற்றூட் | 50 | 60 | 30 |
| கறிமிளகாய் | 120 | 120 | 110 |
| கீரை – 1 பிடி | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 120 | 140 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-35 | 30 |

## சுகவாழ்வு நிலைய கல்வி ஊக்குவிப்பு நிகழ்வு

(இருபாலை)

சுகவழ்வு நிலையம் நடத்தும் சிறுவர்களின் கல்வி மேம்பாட்டை ஊக்குவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2.45 மணிக்கு சுகவாழ்வு நிலையத்தில் நிலைய இயக்குநர் அருட் தந்தை சூ.பேமியன் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட J.R.S.இணைப்பாளர் அருட்தந்தை எட்வின் அடிகளார் கலந்துசிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினர்களாக செங்குந்தா இந்துக் கல்லூரி அதிபர் இ.பாலகுமார், சிறுவர் உரி மைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் செல்வி வரதீஸ்வரி, கிராம அலுவலர்களான ஜி.ஜெயந்திரன், எஸ். தயாபரன், சண்முகவ டிவேல் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் சிறுவர்களிற்கான வங்கிப் புத்தகம், கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (6-4-136)

## உலக புத்தக தினத்தை முன்னிட்டு மாபெரும் புத்தக கண்காட்சி

(கல்வயல்)

உலக புத்தக தினத்தை முன்னிட்டு மா பெரும் புத்தகக்கண்காட்சி எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு மீசாலை பொதுநூலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தின ராக மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தி யாலய அதிபர்கு.கதிர்காமசேகரரும், கௌரவ விருந்தினர்களாக வைத்திய கலாநிதி பி.வி. தம்பித்துரை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் இ.கைலாயநாதன் ஆகி யோர் கலந்துகெள்ளவுள்ளதாக மீசாலை கிளை நூலகத்தின் நூலகர் வி.பாலசுப் பிர மணியம் அறிவித்துள்ளார். (6-4-31)

## மாணவர்களுக்கான போட்டிகள்

(சாவக்சேரி)

தேசிய நூலக வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொதுநூலகத்தில் மாணவர்களுக்கிடை யிலான கட்டுரைப் போட்டி, கவிதைப்போட்டி மற்றும் " அறிவை மேம்படுத்தும் செயற் திட்டம் -2" ஆகிய பரீட்சைகள் நூலக மண்ட பத்தில் இன்று நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்கு மாணவர்களைத் தவறாது கலந்து-கொண்டு பயன்பெறுமாறு நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (6-29)

## நடமாடும் நூலக சேவை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலைப் பொது நூலகத்தினரால் தேசிய நூலக வாரத் தினை முன்னிட்டு மட்டுவில் பொதுமக்கள் மத்தியில் இன்று திங்கட்கிழமை நடமாடும் நூலக சேவை நடத்தப்படவுள்ளது.

இதில் மக்கள் கலந்துகொண்டு பயன் பெறுமாறு நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித் துள்ளார். (6-29)

## நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி வங்கியின் இவ்வாண்டுக்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை செயலக சமுர்த்தி வங்கியின் இவ்வாண்டுக்குரிய வேலைத் திட்டங்கள் கல்வியங்காடு, கோண்டாவில், திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள மூன்று சமுர்த்தி வங்கிகளினூடாக 38 கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நடைமுறைப்படுத் தப்பட்டு வருகின்றது.

இதில் முதற்கட்டமாக J/91,95,96,99, 103,113,117,116,125 ஆகிய 9 கிராம அலு வலர் பிரிவுகளில் உட்கட்டமைப்பு வசதிக ளுக்கு 5இலட்சம் ரூபாவும் சமுர்த்தி வாழ்வா தாரத் திட்டத்திற்கு 3இலட்சம் ரூபாவும் திரியபிச வீட்டுத் திட்டத்திற்கு 60 ஆயிரம் ரூபாவும் வழங்கி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஏனைய 29 கிராம அலுவலர் பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிற்கும் சமுர்த்தி வாழ்வாதாரத் திட்டத்திற்கு தலா 50 ஆயிரம் ரூபாவும் , ஆத்மீக அபிவிருத்திக்கு 8600 ரூபாவும் வழங்கி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது என பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஓ-30)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(நல்லூர்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு தேசிய தலைமையகத்தின் வரு டாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ஆளுநர் சபை தெரிவுக் கான தேர்தல் இடம்பெறவுள்ளது. இதில் ஒவ்வொரு செஞ்சிலுவைச் சங்க மாவட்டக் கிளைகளிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இம்முறை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பதினைந்து பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக் கது. (6-134)




## யாழ்.செய்திகள்

## வலயமட்ட விஞ்ஞான, கணித வினாடி வினாப் போட்டிகள்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான வலயமட்ட விஞ்ஞான, கணித வினாடி வினாப் போட்டி கள் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் மாணவர்களை பங்குபற்றச் செய்யும் பொருட்டு, பாடசாலை மட்டத்தில் ஒவ்வொரு தரத்திலும் (தரம் 6-11) தனித்தனியாக போட்டிகளை நடாத்தி தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் முழுப் பெயரை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர் களை வடமராட்சி வலயக் கல்விப் பணிப் பாளர் வ.செல்வராஜா கேட்டுள்ளார்.

குறப்பிட்ட பாடசாலைகளில் ஒவ்வொரு தரத்திலும் 50 இற்குக் குறைவான மாணவர் கள் எனில் ஒரு மாணவனும், 50 இற்கும் 100இற்கும் இடைப்பட்ட நிலையில் மாணவர் கள் இருப்பின் இரு மாணவரும், 100 இற்கும் கூடுதலான மாணவர்கள் கல்வி கற்பின் 3 மாணவர்களும் போட்டியில் பங்குபற்றலாம். ஆங்கில மொழிமூல மாணவர்களிலிருந்து ஒவ்வொரு தரத்திலும் இரு மாணவர்கள் வீதம் போட்டிக்குத் தோற்றலாம். போட்டிகள் தமிழ் ஆங்கில மொழிகளில் நடைபெறும். கணித விஞ்ஞான பாடங்களுக்கு போட்டிகள் தனித் தனியாக எழுத்துப் பரீட்சையாக நடாத்தப்பட் வுள்ளது.

விண்ணபப்பபடிவத்தில் தமிழ்,ஆங்கில மொழி மூல மாணவர்களின் தொகையைத் தனித்தனியே குறித்து அனுப்புமாறும் வலய மட்டப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக் கப்படும் எனவும் அவர் அறிவித்துள் ளார். (6-14)

## இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியிருந்தோர் கொடிகாமம் புதிய நலன்புரி நிலையத்துக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசங் களிலிருந்து யாழ்.மாவட்டத்திற்கு வந்திருந்த மக்களில் 427 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 257 பேர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் 391 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 178 பேர் கொடிகாமம் திருநாவுக் கரசு மகா வித்தியாலயத்திலும் தங்கவைக்கப் பட்டிருந்தனர்.

அக் குடும்பங்கள் கடந்த சனிக்கிழமை கொடிகாமம் இராமாவில் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையத் தின் முதற் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள் ளார்.

புதிய நலன்புரி நிலையத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனியாக தங்குமிட வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

அத்துடன் இந்த நலன்புரி நிலையத்தை அமைப்பதற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கிய ஐ.நா.நிறுவனங்கள், செஞ்சிலு வைச் சங்கம் ஏனைய அரச , அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் இடம்பெயர்ந்த மக் களை வைத்து பராமரிப்பதற்குரிய ஒத்து ழைப்புகளை வழங்கிய கல்லூரி சமூகத் திற்கும் கல்வித் திணைக்களத்திற்கும் ஏனைய நலன் விரும்பிகளுக்கும் நன்றி களைத் தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

இதேவேளை நலன்புரி நிலையத்தின் இரண்டாவது கட்டடப் பணிகளும் உடனடி யாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சாவகச் சேரி மகளிர் கல்லூரி,நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட் டுள்ள மக்களும் புதிய நிலையத்திற்கு மாற்றப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள் ளார்.

நலன்புரி நிலையத்திற்குரிய பாடசாலைக் காக அடையாளம் காணப்பட்ட காணிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாரத்தில் கட்டடங்கள் அமைப்பதற் குரிய பணிகளை யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் கல்வித் திணைக்களம் மேற் கொள்ளவுள்ளது. (6)

## இந்து அமைப்புகளின் ஒன்றியத்தின் செயற்பாடுகள் இன்றுமுதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இந்து அமைப்புகளின் ஒன்றியத்தின் செயற்பாடுகள் யாவும் இன்று திங்கட்கிழமை முதல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத் தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஒன்றியத்திற்கான வங்கிக் கணக்கு யாழ்ப் பாணம் வர்த்தக வங்கியில் இந்து அமைப் புகளின் ஒன்றியம் என்ற பெயரில் 1060069 285 இலக்கம் கொண்டதாக ஆரம்பிக்கப் பட்டுள்ளது என்றும் ஒன்றியத் தின் கருமபீடம் தினமும் முற்பகல் 10 மணியிலிருந்து 12 மணிவரையும் பிற்பகல் 4 மணியிலிருந்து 5 மணிவரையும் செயற்படும் என இந்து அமைப்புகளின் ஒன்றியத்தலைவர் அறிவித் துள்ளார்.

அத்துடன் கடிதமூலம் தொடர்புகொள் பவர்கள் *இந்து அமைப்புகளின் ஒன்றியம், நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம்* எனும் முக வரியில் தொடர்புகொள்ளுமாறும் நல்லை ஆதீன தொலைபேசி இலக்கம் 021 222 2870 எனவும் அவர் மேலும் அறிவித்துள் ளார். (6)





தொல்புரம் மேற்கு J/169 பிரிவு கிராம அலுவலராகக் கடமை யாற்றி ஓய்வுபெற் றுச் செல்லும் எஸ். கே.சிவலிங்கத்திற்கு தொல்புரம் மத்திய சனசமூக நிலையத் தலைவர் எஸ். கந்த சாமி மாலை அணி வித்து வரவேற்பதை யும், தொல்புரம் மத் திய சனசமூக நிலைய நிர்வாக சபையினர் வாழ்த்துப்பா மாலை வழங்குவதையும் படங்களில் காண லாம்.

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

62



கொண்டுள்ளான். ஆனால் அவனை மணந்து ஜேர்மனியில் தான் ஒரு அந்நியவளாக வாழ விரும்பவில்லை என்றாள். தன் கேள்வியை அண்ணன் ஒபாமாவிடம் கேட்டாள்.

அவருக்கு ஏதேனும் காதல் வாய்ப்புகள்...? ஆம். பரக் ஒபாமா நியூயோர்க்கில் இருந்தபோது வெள்ளைக்காரப் பெண்ணொருவரைக் காதலித்தார். வார இறுதி நாட்களில் இருவரும் சந்திப்பது வழக் கம். ஒருமுறை அவள் ஒபாமா வை தங்கள் குடும்பத்திற்குரிய நாட்டுப்புற பழைய பங்களாவுக்கு வரும்படி அழைத்தாள். அவளுடைய பேரன் அந்த வீட்டை , தனது பேரனிடமிருந்து முதுசொமாகப் பெற்றி ருந்தார்.

நூலக அறை புத்தகங்களாலும் பழைய ஓவியங்களாலும் நிஸ்றந்து காணப்பட்டது. அவளுடைய பேரன் ஜனாதிபதிகள் , தூதுவர்கள், தொழிலதிபர்கள் என்று பலரோடு பழகி பெரிய செல்வாக்குடன் வாழ்ந்ததற்கான அறிகுறிகள் காணப்பட்டன.

அந்த அறையில் நின்றுகொண்டு ஒபாமா தன்னையும் அந்தப் பெண்ணையும் ஒப்பிட்டுப் பார்த்தார். இருவருக்கும் இடையில் இருந்த தூரம் கென்யாவுக்கும் ஜேர்மனிக்குமான இடைவெளியை ஒத்திருந்தது.தாங்கள் இருவரும் ஒன்றிணையும் பட்சத்தில் தான் தன்னையே இழக்க நேரிடும் என்று எண்ணினார். அவளுடன் ஏற்பட்ட பிணக்கு இருவரும் தத்தம் வழிகளில் செல்ல வழிவகுத்தது.

ஔமாவோ அல்லது ஒபாமாவோ தந்தையைப் பற்றிய பேச்சை எடுக்காமல் விட்டிருந்தனர். ஒருநாள் இரவு போசனத்தை முடித்து பின் நீண்டநேரம் வெளியில் உலவிவிட்டு திரும்பினார்கள்.

ஒபாமா இருவருக்கும் தேநீர் தயாரித்தார். அப்போதுதான் அவள் தந்தையைப் பற்றி தன் நினைவுக்கு வந்ததனைத்தையும் கூறத் தொடங்கினாள்.

பரக், அவரை உண்மையாக எனக்கு முற்றிலும் தெரியும் என்று சொல்லமாட்டேன். அவரது வாழ்வு பலவிடங்களில் சிந்திச் சிதறிக் கிடக்கின்றது.மக்களுக்கும் அவரின் குழந்தைகளுக்கும் தெரிந்ததெல்லாம் உதிரிகளும் துண்டுகளும் தான் என்றாள்.

ஔமா அவரை நினைத்தாலே பீதியடைவாள். அவள் பிறந்த போது அவர் வேறு எங்கோ இருந்தார். அப்போது அவர் உன் தாயுடன் ஹவாயில், அதன் பின் ஹவார்ட்டில்.

அவர் திரும்பி கென்யாவுக்கு வந்தபோது ஔமாவின் உடன்பிறந்த அண்ணன் றோயும் (Roy), தங்கை ஔமாவும் குழந்தைகளாக இருந்தனர்.

நாட்டுப்புறத்தில் தங்கள் தாயுடன் வாழ்ந்தனர். அந்த இடத்திற்குப் பெயர் அலேகோ. தந்தை வந்துபோனது கூட ஔமாவுக்கு ஞாபகமில்லை.அப்போது அவளுக்கு வயது நான்கு. றோய்க்கு வயது ஆறு. தந்தை வந்தபோது ஒரு அமெரிக்க வெள்ளைக்காரப் பெண்மணியோடு வந்தது நினைவில் இருக்கிறது. அவளுக்குப் பெயர் (Ruth) 'ருத்' அம்மாவிடமிருந்து இரு குழந்தைகளையும் பிரித்தெடுத்துக் கொண்டு அவர் நைரோபிக்குச் சென்றுவிட்டார்.

ஔமா முதல் முறையாக கண்ணுற்ற வெள்ளைக்காரப் பெண் 'ருத்' தான். சடுதியாக அவள் தான் ஔமாவுக்கும் றோய்க்கும் புதிய அம்மா என்று அறிவிக்கப்பட்டது.

ஏன் அவர்கள் தங்கள் தாயுடனேயே தங்கியிருக்கலாம் அல்லவா? கென்யாவில் விவாகரத்துச் செய்யப்பட்டால் குழந்தைகளை வைத்துப் பராமரிக்கும் உரிமை ஆண்களுக்குத் தான் உண்டு. ஔமாவின் தாய் குழந்தைகளுக்குப் பின்னால் ஒரு விளக்கம் கொடுத்தாள்.

தந்தை செல்வமும் செல்வாக்குமுடையவர். ஆகவே குழந்தை அவரிடம் வளர்ந்தால் தான் நல்லது என்று தான் அப்படி விட்டு விட்டாளாம். ஆரம்பகாலத்தில் தந்தை நன்றாகவே இருந்தார். அவர் ஒரு அமெரிக்க எண்ணெய் நிறுவனத்தில் அதாவது பேர் பெற்ற செல் கம்பனியில் வேலை பார்த்தார். நாட்டுக்கு சுதந்திரம் வந்து சில ஆண்டுகள்தான் ஆயின. அரசாங்கத்தின் மேலிடங்களோடு நல்ல தொடர்புகள் அவருக்கு இருந்தன. பலர் அவரோடு ஒன்றாகப் படித்தவர்கள்.

துணை ஜனாதிபதி, அமைச்சர்கள் எல்லோ ரும் அவரிடம் வந்து உண்டு, குடித்து , மகிழ்ந்து அரசியல் பேசுவார்கள். அவரிடம் ஒரு பெரிய வீடு,பெரிய கார் என்று சொத்துக்கள் இருந்தன. அவரின் இளமையையும் அவர் வெளிநாடுகளில் கற்ற கல்வியையும் கண்டு பலர் வியந்தனர்.

### ஜம்பொன்

இன்னும் ஒன்று அவர் அமெரிக்கப் பெண்ணை மணந்துள்ளார். இது கிடைத்தற்கரிய சம்பத்து. கென்யாவில் சிலவேளைகளில் அவர் ஔமாவின் தாயிடம் வந்து போவார். ருத் அவர் மனைவியாக இருக்கும் போதே தனியாகத் தான்வருவார். ஔமாவின் தாயை அழைத்துக்கொண்டு வெளியே போவார். இதுவுமொரு நாடகம் தான்.

தான் எண்ணிய நேரம்– தன் உண்மையான மனைவியை கைவிடவில்லை என்று உலகிற்கு காட்டுவதற்காக அவர் நடித்த நாடகம். ஔமாவுக்கு நான்கு சகோதரர்கள் இருந்தார்கள். மார்க், டேவிட் ஆகியோர் ருத்தின் வயிற்றில் உதித்தவர்கள். தந்தையுடன் பெரிய பங்களாவில் வாழ்ந்தார்கள். (தொடரும்)

ஒபாமா அவளை சிக்காகோ நகரின் தென் பகுதியைச் சுற்றிக்காட்டினார். தனது அலுவலகத்துக்கு அவளைக் கூட்டிச் சென்றபோது அங்கு ஏஞ்சலா, மோனா, சேர்ளி ஆகியோரிருந்தனர். அவளிடம் கென்யா பற்றிக் கேட்டறிந்து கொண்டனர்.

இங்கிலாந்து இராணியைப் போல் அழகாக ஆங்கிலம் பேசுகிறாள் என்று வியந்தனர். ஒபாமாவைப் பற்றிப் பேசி மகிழ்ந்தனர். ஒபாமாவின் அமைப்புப் பற்றி பேசும்போது, தான் அரசியல் பேசுவதில்லை என்றும் அதை அடியோடு வெறுப்பதாகவும் கூறினாள் ஔமா. அதற்குக் காரணம் அரசியலில் ஈடுபடுபவர்களுக்கு ஈற்றில் விரக்தியும் ஏமாற்றமும் தான் மிஞ்சியிருக்கும் என்றாள்.

வீடு வந்து சேர்ந்ததும் ஔமாவுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. அது ஒரு ஜேர்மனிய சட்டம் பயிலும் மாணவனிடமிருந்து வந்தது. அவன் தன்னில் அளவுகடந்த விருப்பம்

# ஈழத்து இலக்கியப் பரப்பில் சம்ஸ்கிருத ஆக்கங்கள்

05

இவை தவிர மாணவர்களின் தேவை கருதி பல பாடநூல்களும் அர்ச்சகர்களின் தேவை கருதிபல பத்ததித்தொகுப்பு நூல்களும் அர்ச்சகர்களின் தேவைகருதி பல பத்ததித் தொகுப்பு நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

தொகுப்பு நூல்களாக உள்ள இந்நூல்களை பூரணானந்தக் குருக்கள், அச்சுவேலி குமார சுவாமிக்குருக்கள், சுப்பிர மணியசாஸ்திரிகள், தியாகராஜக் குருக்கள், செல்வரட்ணம் கைலாசநாதக் குருக்கள், சிவசாமி ஆகிய அறிஞர்கள் தொகுத்து பதிப்பித்துள்ளனர்.

ஆவரங்கால் சுப்பிர மணிய பண்டி தரின் சிவானந்தலகரி, குமாரசம்பவம் என் னும் சார்பு நூல்களும் குறிப்பிடத்தக்கன.

அறிஞர்களால் வடமொழி சார்பான விடயங்களில் பல கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன.

இவற்றில் குமாரசுவாமிப் புலவரின் அத்யாத்ம ராமாயாணம் ஸ்ரீராமவருணனை, தத்திதாந்தம்,நிருக்தம், உபசர்க்கம், பிங்கல நிகண்டு, மடக்கலங்காரம், அணியிலக்கணம், சொற்குற்றம், பொருட்குற்றம் என்னும் கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை.

தொகுத்து நோக்கும் போது இலங்கையிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தொன்று தொட்டு சம்ஸ்கிருதக் கல்விப் பாரம்பரியம் நிலவி வந்துள்ளமையை அறியக்கூடியதாக உள்ளது.

தமிழ்மொழிக்கும் சம்ஸ்கிருதமொழிக்கும் பல அறிஞர்கள் பங்களித்துள்ளனர். இவற்றில்இருந்து அக்கால சம்ஸ்கிருதமொழி நிலையும், அறிஞர்களது புலமைத்துவமும் வெளிப்படுகின்றது.

மொழி,சமயம்,தத்துவம் என்னும் துறைகளை வளம்படுத்தியதுடன் வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் பாலமாக விளங்கிய அறிஞர்களது செயற்பாடுகளை உய்த்துணர முடிகின்றது.

ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்த சர்மா
BA.(Hons)M.Phil
சிரேஷ்ட விரிவுரையாளர்
சம்ஸ்கிருதத் துறை
யாழ். பல்கலைக்கழகம்.

சம்ஸ்கிருதமொழியும் அதன் இலக்கியங்களும் எம் இனத்தவரின் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றுடன் இரண்டறக் கலந்து சிறப்புற்றிருந்த தன்மை புலப்படுகின்றது. (முற்றும்)

acer
ஆங்கில மற்றும் தகவல்தொழில்நுட்ப ஆண்டு -2009
Metropolitan Office (Pvt) Ltd உடன்
NAVAHALA இணைந்து
வழங்கும் விசேட விலைக்கழிவுடன்
acer கணினிகள்
Rs.55,500.00
- Intel Pentium Dual -Core 2.4GHz
- 18.5 LCD Monitor
- IGB RAM -160 GB HDD
- DVD Writer -Card Reader
- 56K internal Modem

NAVAHALA
Agent for Metropolitan
200,K.K.S.Road,
Jaffna.
021-2225461/2
navahala
metropolitan
(C/2479)

# தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை வழங்கப்படும் வரை புலிகளின் போராட்டம் ஓயப்போவதில்லை

## பினான்சியல் டைம்ஸ் இதழ் தெரிவிப்பு

(கொழும்பு)

பழிக்குப்பழி வாங்கும் வகையில் புலிகள் மீண்டும் ஒன்றிணைவார்கள் எனவும் அது அரசாங்கத்தின் பயங்கரவாதத்தை ஒழிக்கும் செயலுக்கு சமமாக இருக்குமெனவும் பினான்சியல் டைம்ஸ் இதழ் தனது தலையங்கத்தில் எச்சரித்துள்ளது.

சிங்களப் பெரும்பான்மையானது பெருந்தன் மையைக் காட்டி தமிழ் மக்கள் தமது வாழ்வைதாமே நிர்ணயித்துக்கொள்ள அனுமதிக்காத வரை எரியும் தணல் போன்ற இந்த யுத்தம் அத்தகைய நிலையைத் தோற்றுவிக்கக் காரணமாக அமையும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்டுள்ள பினான்சியல் டைம்ஸின் தலையங்கத்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் யுத்தம் புத்தி சாதுரியமிக்க புலிகளின் சம்பிரதாயமான திறமைகளையே தோற்கடித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இறுதியாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை குரல் எழுப்பியுள்ளது. எல்லா வருடங்களிலும் எத்தகைய துயரமான சம்பவங்கள் நடந்துள்ளன என்பதை அது புரிந்து கொண்டுள்ளது. இலங்கையில் வட கிழக்கில் தமிழ் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இரத்த ஆறு ஓடுகிறது.

உண்மை தான். இந்த நீண்ட கால உள்நாட்டு யுத்தத்தின் முடிபும், விளைவும் அறியப்பட முடியாதவாறு மேகங்களால் சூழப்பட்டது போன்று இரு தரப்பினரின் அறிக்கைகளும் உள்ளன.

மேலும் ஐ.நா.வின் செய்மதிப் படங்கள் மற்றும் நேரில் கண்டவர்களின் சாட்சியங்கள் மூலம் பெண்கள் அநேக சிறுவர்கள் உட்பட அப்பாவிப் பொதுமக்கள் நூற்றுக் கணக்கில் அரச விமானத்தாக்குதல்களாலும் எறிகணை வீச்சுக்களாலும் கொல்லப்படுவது நிச்சயமாகத் தெரிகிறது.

ஒரு காலத்தில் அதி பயங்கரமான சட்டபூர்வமற்ற இராணுவமாகத் திகழ்ந்த விடுதலைப் புலிகள் அமைப்பு குறுகிய நிலப்பரப்பின் காட்டுப்பகுதியில் தள்ளப்பட்டுள்ளதுடன் குண்டுத் தாக்குதல்களால் சிதறடிக்கப்படுகிறது. அவர்களுக்கு மத்தியில் 50 ஆயிரம் பேருக்கு மேலான பொது மக்கள் சிக்குண்டுள்ளார்கள்.

ஐ.நா.வின் அறிக்கையின் படி 6ஆயிரத்து 400 பொதுமக்கள் ஜனவரி இறுதி வரை கொல்லப்பட்டுள்ளார்கள். கடந்த வாரம் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இதன் அடிப்படையில் மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்த நெருக்கடிகள் பேரழிவினை ஏற்படுத்தும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எச்சரித்துள்ளார்.

இதேவேளை கடந்த புதன்கிழமை ஐ.நா. பாதுகாப்புச் சபை கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு இலங்கை இராணுவத்தையும் ஆயுதங்களை கீழே வைக்குமாறு புலிகளையும் இறுதியாக கோரியுள்ளதுடன் பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேற அனுமதிக்குமாறு கேட்டுள்ளது.

இதுவெறும் அறிக்கை. பலவீனமானதும் கூட. சட்டத்திற்குக் கட்டுப்பட்டதான தீர்மானம் அதற்குப் பதிலாக மேற்கொள்ளப்பட வேண்டும் யுத்த குற்றச் செயல்களுக்காக வழக்குத் தொடுப்பதாக ஐ.நா. அச்சுறுத்த வேண்டும்.

புலிகள் தற்கொலைத் தாக்குதலில் கை சேர்ந்தவர்கள் அவர்கள் மீண்டும் ஒன்றிணைவார்கள். வெளிநாட்டில் விரிவு பெறுவார்கள். பழிவாங்கும் எண்ணமுடைய அரசாங்கத்திற்கு இணையாக பழிக்குப் பழிவாங்க அவர்கள் முற்படலாம் இவ்வாறு பினான்சியல் டைம்ஸ் தனது தலையங்கத்தில் தெரிவித்துள்ளது. (6)

## யாழ். நலன்புரி முகாம்களில் அஞ்சல் மற்றும் வங்கிச் சேவைகள்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள 12 நலன்புரி நிலையங்களிலும் அஞ்சல் மற்றும் வங்கிச் சேவைகள் வழங்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவற்றில் 8 நலன் புரி நிலையங் களுக்கு சிடிஎம்ஏ தொலைபேசி வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் . மாவட்டத்திற்கு வன்னிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து கடல் வழியாகச் சென்றவர்களும் , திருகோணமலை புல்மோட்டை பகுதிக்கு படகுகளில சென்றவர்களில் சிலரும் யாழ்மாவட்த்தில் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட் டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## விடுவிக்கப்படாத பகுதியிலிருந்து 50ஆயிரம் பொதுமக்கள் மீட்பு

### பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

72 மணித்தியாலங்களுக்குள் பாதுகாப்பு வலயத்திலிருந்து 50 ஆயிரம் பொதுமக்களை பாதுகாப்பு படையினர் மீட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இராணுவத்தினரிடம் சரணடைந்த பொதுமக்களுக்கு தேவையான உணவு குடிநீர் போன்றன வழங்கப்பட்டு வருவதா கவும் தற்போது விடுதலைப்புலிக ளின் நடமாட்டம் வெள்ளை முள்ளிக்வாய்க் கால் பகுதியில் 400 X 600 சதுர மீற்றர் பரப்பிற்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை முல்லைத்தீவில் விடுவிக்கப்படாத பகுதிகளில் சிக்கியிருந்த பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்பு படையினரால் மீட்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (6)

## புனரமைப்பு நடவடிக்கை பற்றியே விஜய் நம்பியாருடன் பேசப்படும்

### அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு

விடுதலைப்புலிகளுக்கு எதிரான மோதல்கள் முடிவுக்கு வந்துள்ள நிலையில் மோதலுக்குப் பின்னரான புனர்வாழ்வு நடவடிக்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் உதவியை நாடுவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கைக்கு வந்திருக்கும் ஐக்கிய நாடுகள் செயலாளர்நாயக அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி விஜய் நம்பியாரைச் சந்திக்க விருக்கும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க அரசாங்கத்தின் திட்டம் பற்றிக் கலந்துரையாடவுள்ளார்.

பாதுகாப்பு வலயத்திலுள்ள மக்களைப் பாதுகாப்பது குறித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்காகவே பான்கீ மூன் தனது அலுவலக சிரேஷ்ட அதிகாரியான விஜய் நம்பியாரை இலங்கைக்கு அனுப்பியுள்ளார்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்திருப்பதாகவும் கரையோரப் பகுதி முழுவதையும் அரசாங்கப் படைகள் பாதுகாத்திருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதனால் விஜய் நம்பியாருடனான சந்திப்பில் மோதல்களுக்குப் பின்னரான புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்தே முக்கியமாகக் கலந்துரையாடப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வலயத்தில் சிக்குண்டிருக்கும் மக்கள் குறித்து ஆராய்வதற்கு இலங்கை வந்த விஜய் நம்பியார் இன்று திங்கட்கிழமை வவுனியாவுக்குச் சென்று நலன்புரிநிலையங்களிலுள்ள மக்களைப் பார்வையிடவுள்ளார். (6)

## தற்போது நிலவும் காலநிலை இம்மாதம் இறுதிவரை தொடரும்

(கொழும்பு)

தற்போது நாட்டில் நிலவும் வெப்பநிலை இந்த மாத இறுதிவரை தொடருமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

தென்மேற்கு பருவப்பெயர்சிக்காற்று ஆரம்பிக்கும் வகையில் இந்த காலநிலை தொடருமென திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த காலப்பகுதியில் கடுமையான காற்று வீசும் சாத்தியக் கூறு இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6-4)

## பொதுமக்கள் பாதிக்கப்படுவதை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது

### பொதுநலவாய அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் மனிதாபிமான நெருக்கடி குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ள பொதுநலவாய அமைப்பு பொதுமக்கள் மோசமாகப் பாதிக்கப்படுவதை எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது எனக் கூறியுள்ளது.

சர்வதேச மனிதாபிமான சட்டங்களைப் பின்பற்றுமாறும் மோதலில் சிக்குண்டுள்ள பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அனைத்து தரப்பினரையும் அவ்வமைப்பு வலியுறுத்தியுள்ளது.

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ்சர்மா இது தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை கருத்துத் தெரிவிக்கையில்,

பொதுமக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்துவதை விடுதலைப்புலிகள் உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் இலங்கை அரசாங்கம் மோதல் வலயத்தில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்பது உட்பட வலிந்த தாக்குதல்களை மேற்கொள்வதில்லை என அளித்த உறுதிமொழிகளை பின்பற்ற வேண்டும் எனவும் கூறினார்.

மோதல் வலயத்திலுள்ள மக்களுக்கும் இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களிலுள்ள மக்களுக்கும் அவசியமாகத் தேவைப்படும் நிவாரணங்களை சர்வதேச மனிதாபிமான நிறுவனங்கள்கொண்டு சென்றுவழங்குவதற்கு இலங்கை அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட வேண்டும். அத்துடன் முகாம்களில் உள்ளோரின் பாதுகாப்பு அதிமுக்கியமானது எனவும் அவர் கூறினார்.

இலங்கையில்வைத்தியசாலைகள் மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டமை குறித்தசெய்திகள் உட்பட மோசமடைந்துவரும் நிலைமை குறித்து தாம் மிகவும் கவலையடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பொதுமக்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதன் மூலமும் பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்தின் மூலமுமே இலங்கையில் உறுதியான சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்பது பொதுநலவாய அமைப்பின் உறுதியான நம்பிக்கையாகும் எனவும் கமலேஷ் சர்மா கூறியுள்ளார். (6)

## மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக பொருளாதார கட்டுப்பாடுகளை விதிக்கத் திட்டம்

(கொழும்பு)

மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக பொருளாதார கட்டுப்பாடுகளை விதிக்கத் திட்டமிட்டுள்ளதாக பிரபல சிங்கள ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தை நிறுத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை இலங்கை நிராகரித்ததனைத் தொடர்ந்து இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டன்,அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் பொருளாதார கட்டுப்பாடுகளை விதிக்கத் திட்டமிட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கைக்கு எதிராக பொருளாதார தடைகள் விதிக்கப்படவேண்டும் எனவும் பொதுநலவாய நாடுகள் உறுப்புரி மையை ரத்து செய்ய வேண்டும் எனவும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி யுள்ளனர்.

மேலும் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களை புறக்கணிக்குமாறும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (6)



நிக்கொட் நிறுவனத்தின் அனுசரணையுடன் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் ஒன்றரைகோடி ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடி கட்டடத் திறப்பு விழாவில் நிக்கொட் நிறுவனத்திட்டப் பணிப்பாளர் ரி.லங்கானேசன் மங்கல விளக்கேற்றுவதையும், கணனி அறையினை ஆசிய அபிவிருத்தி வங்கி ஆலோசகர் திருமதி எஸ்.கொடித்துவக்கு, அலுவலக அறையினை வலிமேற்கு பிரதேச செயலாளர் திருமதி தே.பாபு ஆகியோர் திறந்து வைப்பதையும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி ரிச்சாட் வோக்ஸ்க்கு வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சோனியா)

# இலங்கையில் சமாதானத் தீர்வை ஏற்படுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்



## கருணாநிதி வேண்டுகோள்

(சென்னை)

இலங்கையில் சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கு இந்தியா முன்னுரிமை அளிக்க வேண்டும் எனவும் இலங்கை இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்கு இந்திய மத்திய அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரியும் தமிழக முதல்வர் கருணாநிதி பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் சோனியாகாந்தி ஆகியோருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது,

ஏப்ரல் 27 ஆம் திகதி நான் மேற்கொண்ட உண்ணாவிரதத்தின் பின்னர் இந்திய அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக மோதலை நிறுத்துவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்தது. ஆனாலும் முழுமையாக யுத்த நிறுத்தத்திற்குப் பதிலாக சிறிய ரக ஆயுதங்கள் மூலமான தாக்குதல்களும் இராணுவ நடவடிக்கைகளும் தொடர்வதாகக் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களுக்கு உதவிகளும் நிவாரணங்களும் கிடைப்பதாக தகவல்கள் கூறுகின்றன. ஆனாலும்இருதரப்பினருக்கும்இடையிலான கடும் மோதல்கள் தொடர்பான செய்திகளும் கிடைக்கின்றன.

அமெரிக்கா, பிரிட்டன் உட்படஉலக நாடுகள் பலவும் இப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத் துகின்ற நிலையில், தொடர்ச்சியாக இந்தியாவினால் வலியுறுத்தப்பட்டவாறு இலங்கையில் அரசியல் தீர்வு காண்பதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய அரசை நான் கேட்டுக்கொள்கிறேன் என தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இந்திய அரசாங்கம் விமானம் மூலம் உணவுப் பொட்டலங்களைப் போட வேண்டும் என அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா கூறிய நிலையில் தி.மு.க தலைவர் கருணாநிதி மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# ம.தி.மு.க. தொண்டர் தீக்குளிப்பு

(வத்திராயிருப்பு)

வத்திராயிருப்பு அருகேயுள்ள மேலக்கோட்டை தெற்கு தெருவைச் சேர்ந்தவர் அய்யனார்(40) ம.தி.மு.க தொண்டர். நேற்று முன்தினம் நடந்த விருதுநகர் தொகுதியின் ஓட்டு எண்ணிக்கையில் வைகோ பின்தங்கியிருப்பதாக அறிந்தார்.

வீட்டுக்குச் சென்ற அவர் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீவைத்துக் கொண்டார்.வத்திராயிருப்பு அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். வத்திராயிருப்பு பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (6)

# எதிர்க்கட்சி தலைவர் பதவியை துறக்க அத்வானி முடிவு


(புதுடெல்லி)

பா.ஜனதா கூட்டணி தோல்வி அடைந்ததால் பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் பதவியை ஏற்கப்போவதில்லை என்று அத்வானி அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தலில் பா.ஜனதா கூட்டணி தோல்வி அடைந்துள்ளது. கடந்த 2004 பாராளுமன்ற தேர்தலில் பா.ஜனதா கட்சி மட்டும் தனியாக 138 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது.ஆனால், இந்த தேர்தலில் அதை விடக் குறைவான இடங்களையே கைப்பற்றியிருக்கிறது.அதனால், பா.ஜனதா கட்சியின் மூத்த தலைவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

சூழ்நிலையில் தேர்தல் முடிவுகள் குறித்து ஆலோசிப்பதற்காக பா.ஜனதா கட்சி எம்.பிக்களின் கூட்டம் நேற்று முன்தினம் டெல்லியில் நடைபெற்றது.

அக் கூட்டத்தில் பேசிய அத்வானி, 'தேர்தல் தோல் விக்கு பொறுப்பேற்று எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பை ஏற்கப் போவதில்லை' என்று தெரிவித்தார். தற்போதும் காங்கிரஸை அடுத்து பா.ஜனதா அதிக இடங்களைக் கைப்பற்றியிருக்கிறது. எனவே, பாராளுமன்றத்தில் அதன் தலைவராக இருப்பவரே எதிர்க்கட்சி தலைவராக செயல்படுவார். அந்தப் பதவிக்கு மத்திய காபினெட் மந்திரி பதவிக்கு இணையான அந்தஸ்து அளிக்கப் படும் .அதை அத்வானி ஏற்க மறுத்துள்ளார்.



மேலும் புதிய தலைவரை தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறும் தன்னை பொறுப்பிலிருந்து விடுவிக்குமாறும் தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சியின் தலைவர்களை அவர் கேட்டுள்ளார். அதேநேரத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின்தலைவராக அத்வானி நியமிக்கப்படலாம் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.(6)

# ஜனநாயகத்தை பணநாயகம் வீழ்த்திவிட்டது

## வைகோ தெரிவிப்பு

(சென்னை)

"தமிழகத்தின் நலன் காக்க, ஈழத்தமிழர் துயர் துடைக்க, இந்திய ஜனநாயகத்துக்கு வலுவூட்ட, ம.தி.மு.க. பயணத்தை நெஞ்சுரத்தோடு முன்பைவிட முனைப்புடன் தொடர வேண்டும்" என்று ம.தி.மு.க.பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், லோக்சபா தேர்தலில் தமிழகத்திலும், புதுவையிலும் தி.மு.க. -காங்கிரஸ் கூட்டணியினர் தொகுதிக்குள் கொடுத்த ஊழல் பணத்தால், பல தொகுதிகளில் ஜனநாயகம் சாகடிக்கப்பட்டது. அதையும்மீறி, ஜெயலலிதா தலைமையில் அமைந்த கூட்டணி 13 தொகுதிகளில் பெற்றுள்ள வெற்றி, ஜன்நாயக்துக்கு சூட்டப்பட்ட மகுடம்.

விருதுநகர் லோக்சபா தொகுதியில் என்னை வேட்பாளராக ம.தி.மு.க.அறிவித்ததுடன், என்னை எதிர்த்துப் போட்டியிடும் வேட்பாளர்யார் என்றால், ஊழல் பணம் என்று குறிப்பிட்டேன்.



என்னுடைய தொகுதியில் ஒரு வாக்குக்கு 500 ரூபாய் வீதம் வாக்காளர்களுக்கு வீடு வீடாக பணத்தை வழங்கினார். வாங்க மறுத்த வீடுகளுக்குள்ளும் பண 'கவர்'கள் திணிக்கப்பட்டன.

அராஜக சக்திகள் மலை அளவு குவித்த பணத்தையும் மீறி, எனக்கு வாக்களித்த வாக்காள மக்களுக்கும், அ.தி.மு.க. தொண்டர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளுக்கும் நன்றி. இவ்வாறு வைகோ கூறியுள்ளார். (6)

# புதிய அமைச்சரவையில் ராகுலுக்கு பதவி



## மன்மோகன்சிங் தெரிவிப்பு

(புதுடில்லி)

'மத்தியில் மீண்டும் அமையும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் பிரதமர் மன்மோகன்சிங்தான்" என்று காங்கிரஸ் தலைவர்சோனியா திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.தேர்தல்முடிவு வெளியான பின்னும், நேற்று முன்தினம் ஜோதிர் ஆதித்ய சிந்தியா உட்பட சிலர், பிரதமர் பதவிக்கு ராகுல் முழுத் தகுதியானவர் என்று கூறியள்ளனர்.

இந்நிலையில், டில்லியில் சோனியாவின் 10 ஜன் பத் சாலை பங்களாவில் சோனியாவும் பிரதமர் .மன்மோகனும் பத்திரிகையாளர்களுடன் பேசினர்.

பத்திரிகையாளர்கள் கோரசாக, "ராகுலுக்கு புதிய அரசில் என்ன பதவி" என்று கேட்டனர். "அது பற்றி பிரதமர் மன்மோகன் சிங்தான் முடிவெடுக்க வேண்டும் என்று சோனியா கூறினார். வெற்றி குறித்துக் கூறியபோது, "தங்களுக்கு நல்லது எது என்று தெரிந்து சரியான முடிவை வெளிப்படுத்தியிருக்கின்றனர் மக்கள்" என்று குறிப்பிட்டார் சோனியா. மன்மோகன் சிங் கூறுகையில்," சோனியா, ராகுல் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை தான் தேர்தல் வெற்றியைக் காட்டுகிறது'' என்று குறிப்பிட்டு, என் புதிய அமைச் சரவையில் ராகுல் சேர்க்கப்படுவார்.

அவர் சேர வேண்டும் என்பது என் விருப்பம். அதற்கான முயற்சி எடுக்கப்படும் என்றார். (6)

# தேர்தலில் மண்ணைக் கவ்விய பிரபல நடிகர்களின் கட்சிகள்

(சென்னை)









சமீபத்தில் நடந்த லோக்சபா தேர்தலில் நடிகர்கள் விஜயகாந்தின் தே.மு.தி.க., சரத்குமாரின் சமத்துவ மக்கள் கட்சி, கார்த்திக்கின் அகில இந்திய நாடாளும் மக்கள் கட்சி, நடிகர் ராஜேந்தரின்இலட்சிய தி.மு.க. ஆகிய கட்சிகள் போட்டியிட்டு,அவை அனைத்தும் தோல்வியடைந்தன. ஒரு தொகுதியில்கூட வெற்றி பெறவில்லை.

தே.மு.தி.க. தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்த்து 40 தொகுதிகளிலும், சரத்குமாரின் சமத்துவ மக்கள் கட்சி நான்கு தொகுதிகளிலும், கார்த்திக்கின் அகில இந்திய நாடாளும் மக்கள் கட்சி தேனி மற்றும் விருதுநகர் என, இரு தொகுதிகளிலும் நடிகர் ராஜேந்தரின் இலட்சிய தி.மு.க.,கள்ளக்குறிச்சி, திருச்சி தொகுதிகளிலும் போட்டியிட்டன. இதில் எந்த ஒரு நடிகரின் கட்சியும் வெற்றி பெறவில்லை.

விதுதுநகரில் போட்டியிட்ட நடிகர் கார்த்திக்கும், கள்ளக்குறிச்சியில் போட்டியிட்ட ராஜேந்தரும் கூட தோல்வி அடைந்தனர். (6)

# பொப் பாடகர் மைக்கல் ஜாக்சன் தோல் புற்றுநோயால் அவதி

(லண்டன்)



பிரபல பொப் பாடகர் மைக்கேல் ஜாக்சன்நோயினால் அவதிப்பட்டு வருகிறார்.இந்த நிலையில் அவருக்கு முகத்தில் தோல் புற்று நோய் ஏற்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.முகத்தில் நாடிக்குக் கீழே கழுத்தை ஒட்டி இந்த புற்றுநோய் உள்ளது. ஆனால் இதை குணப்படுத்தி விடலாம் என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

மைக்கேல் ஜாக்சன் முன்பு அடிக்கடி பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மூலம் முகத் தோற்றத்தை மாற்றி வந்தார். மேடைக்கு மேடை இப்படி வித்தியாசமான முக அழகுடன் தோன்றுவது வழக்கம்.

இது பக்க விளைவுகளை ஏற்படுத்தி அவரை மீளாத நோயில் தள்ளிவிட்டது. (6)

# பிரிட்டிஷ் பொலிஸ்துறையில் பணியாற்றும் சீக்கியருக்கு குண்டு துளைக்காத தலைப்பாகை

(லண்டன்)


பிரிட்டிஷ் பொலிஸ் துறையில் ஆயுதப் படைப்பிரிவில் இடம்பெற்றுள்ள சீக்கிய பொலிஸாருக்கு குண்டுதுளைக்காத தலைப்பாகை வடிவமைக்கப்பட்டு வருகிறது. பிரிட்டிஷ் பொலிஸாரில், பாதுகாப்பில் ஈடுபடும் ஆயுத பொலிஸாருக்கு குண்டு துளைக்காத தலைக் கவசங்கள் வழங்கப்படுகின்றன.

பணியின் போது இவற்றை அணிவது கட்டாயம். பிரிட்டிஷ் பொலிஸ் படையில் சீக்கியர்களும் இடம் பெற்றுள்ளனர்.இவர்கள் தங்கள் மத சம்பிரதாயப்படி, தலைப்பாகை அணிவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் , ஆயுதப் படைப் பிரிவில் இவர்கள் இடம்பெற வேண்டுமானால், குண்டு துளைக்காத தலைக்கவசம் அணிய வேண்டும். தலைப்பாகைக்கு பதிலாக தலைக் கவசம் அணிவதற்கு,சீக்கிய மத சம்பிரதாயம் இடம் தருவதில்லை.

இதனால், ஆயுதப்படைப் பிரிவில் சீக்கியர்கள், சேர்க்கப்படுவது இல்லை.தற்போது ஆயுதப்படைப் பிரிவில் சீக்கியர்களும் இடம் பெறும் வகையில், அவர்களுக்கு குண்டு துளைக்காத தலைப்பாகையை ஆராய்ச்சியாளர்கள் வடிவமைத்து வருகின்றனர். இந்தத் தலைப்பாகை, கேவ்லர் போன்ற பொருளில் தயாரிக்கப்படுகிறது. இதன் இறுதி வடிவம்பூர்த்தியானதும், சீக்கிய பொலிஸாருக்கும் குண்டுதுளைக்காத தலைக்கவசம் வழங்கப்படவுள்ளது. (6)

# இடம்பெயர்ந்தவர்களை முகாமில் தங்கவைத்து உணவு வழங்குவதன் மூலம் பிரச்சினை தீர்ந்துவிடாது

## பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவிப்பு



(கொழும்பு) வடக்கில் இடம் பெயர்ந்துள்ள மக்களின் பிரச்சினைகளை பூர்த்தி செய்ய சட்ட ரீதியான தீர்வு அவசியம் என பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார். மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் இடம் பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, வடக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீள அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

அவர்களுக்கு உணவு கொடுத்து முகாம்களில் தங்க வைப்பதன் மூலம் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட முடியாது. குறிப்பாக வடக்கில் அகதிமுகாம்களை அதிகரித்துக்கொண்டு செல்வதைவிட இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு அவர்களை சொந்த இடங்களில குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

ஐந்து அல்லது பத்து ஏக்கர் நிலப்பரப்பிற்குள் இரண்டு இலட்சம் மக்களை தங்க வைத்திருப்பதன் மூலம் தீர்வு ஏற்பட்டுவிடாது.

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகளை பாதுகாக்க சட்ட ரீதியாக தீர்வை ஏற்படுத்தும் செயற்திட்டம் அவசியமானதாக இருக்கிறது. இல்லையெனில் வீணாக சர்வதேச தலையீடுகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

எனவே இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை தேசியப் பிரச்சினையாக கருத்திற் கொள்ளப்பட்டு அதற்கு சட்டரீதியான தீர்வை முன் வைக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என அவர் கூறினார். (6)

# இடம்பெயர்ந்து வருவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

## வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பீ.எஸ்.எம். சார்ள்ஸ்

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு வருவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பீ.எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள இருபத்து நான்கு முகாம்களிலும் ஒரு இலட்சத்து எழுபதாயிரத்து 553 பேர் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது, வவுனியாவில் உள்ள இருபத்து நான்கு முகாம்களில் 56 ஆயிரத்து 339 குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளன. இக் குடும்பங்களுக்கு தேவையானஅடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். புதிதாக முகாம்களுக்கு வருவோருக்கு சமைத்த உணவுகளை மூன்று தினங்களுக்கு வழங்கி வருகிறோம்.

அதன் பின்னர் சமைத்து உண்ணுவதற்கு வசதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. முகாம்களில் விசேட வைத்திய சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார். (6)

# பிரபாகரன் இறுதி நிலை யுத்தத்தை நடத்துவதாக தகவல் கிடைத்துள்ளது

## கடற்படை பேச்சாளர் தெரிவிப்பு

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும் கடற்புலிகளின் பிரிவுக்குழுத் தலைவரான சூசையும் இன்னமும் யுத்தப் பிரதேசத்திலிருந்து இறுதியுதத்தத்தை நடத்துகின்றனர் என சூசையின் மனைவி கூறியுள்ளதாக கடற்படை அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் கடற்படையின் பேச்சாளரான மகேஷ் கருணாரட்ண கூறுகையில்,

புலிகளின் தலைவர் பிரபாகரன் எண்ணற்ற வகையில் மடிந்துகொண்டு வரும் தனது போராளிகளில் எஞ்சியுள்ளோர் சூழ குறுகிக் கொண்டு வரும் நிலப்பரப்பில் இருந்து கொண்டு இறுதி யுத்தத்தை நடத்தி வருகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில், 54 வயதான பிரபாகரன் முல்லைத்தீவு மாவட்டத்தின் வடகீழ் பிரிவில் உள்ள சிறிய பகுதியில் உள்ளாரென நம்பப்படுகின்றது. அங்குதான் பிரிவினை வாத இயக் கத்தை முறியடிக்க பாதுகாப்புப் படைகள் காத்திருக்கின்றன.

கைதுசெய்யப்பட்டுள்ள புலிகளின் சிரேஷ்ட தலைவர் ஒருவரின் உறவினர்கள் வழங்கிய தகவல்களிலிருந்து இன்னமும் தனது போராட்டத்தை பிரபாகரன் நடத்தி வரு கிறார் என்று உறுதியாகியுள்ளது.

கடற்புலிகளின் தலைவரான கேணல் சூசை என்று அழைக்கப்படும் ரி.சிவநேசனின் மனைவி தனது கணவரும் பிரபாகரனும் இன்னமும் யுத்தப்பிரதேசத்தில் உள்ளதாக தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை யுத்தப் பிரதேசத்திலிருந்து படகில் தப்பிச் செல்லமுயன்ற வேளையில் சூசையின் மனைவி, மகள்,மகன் மற்றும் குடும்பத்தாரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இதேவேளை பிரபாகரன் தொடர்பில் வேறுபட்ட கருத்துக்கள் கூறப்படுகின்றன. சிலர் அவர் ஏற்கனவே நாட்டைவிட்டு தப்பிச் சென்றுவிட்டார் என்று கூறுகின்றனர் என்றார். (6)

# கேணல் தர இராணுவ அதிகாரி புலனாய்வுத் துறையால் கைது

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தை பொலிஸாருடன் இணைந்து புலனாய்வுத் துறையினர் நடத்திய திடீர் சோதனை நடவடிக்கை ஒன்றின் போது இராணுவத்தின் கேணல் தரத்தில் உள்ள அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இவரிடம் இருந்து மைக்ரோ ரக கைத் துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டிருக்கின்றது.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட விடுதலைப்புலி சந்தேக நபர் ஒருவர் விசாரணையின் போது தெரிவித்த தகவலைத் தொடர்ந்தே இந்த இராணுவ அதிகாரி கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரி இரத்மலானை இராணுவ முகாமில பணி புரிபவர்எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மைக்ரோ ரக கைத்துப்பாக்கியை அவர் விடுதலைப் புலிகளிடம் இருந்தே பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட இராணுவ கேணல் தொடர்ந்தும் புலனாய்வுத் துறையினரால் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ச-5)

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் "3A, 2AB" சித்தி பெற்ற வடமராட்சி கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு -01.05.2009

## உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை







## கரவெட்டி ஞானசாரியார் பாடசாலை






> காரியம் நடந்த பிறகு யோசனை செய்வது அறுவடைக்குப் பின்பு மழை பெய்வது போலாகும்.
>
> ~ ஹாலந்து

வலம்புரி

## ஐ.சி.ஆர்.சி. தனது தார்மீகப் பணியை செய்தாக வேண்டும்

வன்னிப் பகுதியில் போர்க்களத்தில் சிக்குண்டுள்ள மக்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் காயமடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்களுக்கான சிகிச்சை வழங்க முடியாமையால் அவர்கள் மரணிக்கும் நிலையில் இருப்பதான தகவல்கள் நெஞ்சை நெருடுகின்றன.

வன்னியில் யுத்தம் ஆரம்பித்த போது அங்கு செயற்பட்ட சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் வெளியேறின.

அவற்றின் வெளியேற்றத்தை தடுத்து வீதிகளிலிருந்து மக்கள் மறியல் போராட்டம் நடத்தினர்.

எங்களை விட்டு எங்கே வெளியேறுகிறீர்கள் என்று கேள்வி எழுப்பினர். நீங்கள் வெளியேறினால் எங்களைக் காப்பாற்றுவது யார் என்று கண்ணீர் வடித்து அழுது கெஞ்சியவர்களில் இன்று பலர் இல்லாமல் போய் விட்டனர்.

இந்தப் பரிதாபம் உலக வரலாற்றில் கறை படிந்த நிகழ்வாகும்.

தங்கள் உயிரைக் காப்பாற்றுமாறு கெஞ்சிக் கேட்ட போதிலும் எதுவும் செய்ய முடியாமல் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் வெளியேறின.

இருந்தும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உதவுகரமாக இருந்தது. யார்தான் விட்டுப் போனாலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எங்களோடு இருந்து எங்களைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையில் இருந்த மக்கள் இப்போது அநாதைகளாகிவிட்டனர்.

ஆம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் தனது தார்மீகப் பணியை –தனது கொள்கையை –இலக்கை –மகுட வாசகத்தை கைவிட்டு வன்னியின் போர்க்களத்திலிருந்து வெளியேறியது.

என்ன செய்ய முடியும்! போர்க் களத்தில் படுகாயமுற்று முனகிக் கொண்டிருக்கும் மக்களைக் காப்பாற்ற யாருமே இல்லை.

இந்தத் துயரம் உடனடியாகத் தவிர்க்கப்பட வேண்டும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மிகப்பெரும் எடுப்பில் தனது சகல வளங்களையும் திரட்டி காயமுற்ற மக்களைக் காப்பாற்ற முன்வரவேண்டும்.

அதேநேரம் காயப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்குத் தேவையான மருத்துவர்களை ஏற்பாடு செய்யும் பணியையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொள்ள வேண்டும்.

இதேநேரம் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களைப் பாதுகாப்பது மற்றும் யுத்த களத்தில் சிக்குண்டுள்ள மக்களுக்கு எதுவித ஆபத்துமின்றி மீட்பது, காயமடைந்த மக்களுக்கு சிகிச்சை அளிப்பது ஆகிய பணியை இலங்கை அரசு முன்னெடுத்தாக வேண்டும்.

இதனைச் செய்ய அரசு தவறுமாயின் மிகப்பெரும் மனிதப் பேரவலம் ஏற்படுவது உறுதியாகிவிடும்.

எனவே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை அரசு, சர்வதேச சமூகம் என அனைத்துத் தரப்பும் இணைந்து மனிதாபிமானப் பணியை மேற்கொள்வது அவசர –அவசிய தேவையாகும்.

# சீனா வழங்கிய ஆயுதங்கள் மூலமே இலங்கை அரசு போரை வென்றுள்ளது

## பிரித்தானிய ரைம்ஸ் தெரிவிப்பு

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக முறியடிக்கும் தருணத்தை எட்டியுள்ளதாக படையினர் தெரிவித்து வருகின்றனர். ஆனால் அரசின் இந்த வெற்றிக்கான காரணம் சீனா வழங்கிய ஆயுதங்களே என பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் த ரைம்ஸ் நாளிதழ் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்த நாளிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு,

தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக முறியடிக்கும் தருணத்தை எட்டியுள்ளதாக படையினர் தெரிவித்து வருகின்றனர். ஆனால் அரசின் அந்த வெற்றிக்கான காரணம் சீனா வழங்கிய ஆயுதங்களே என பலரும் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

சீனா தனது ஆயுதங்களை நட்பு நாடுகளுக்கும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கும் தொடர்ச்சியாக வழங்கி வருவது மேற்குலகத்தின் கவனத்தை மட்டும் ஈர்க்கவில்லை. மாறாக பல ஆசிய நாடுகளின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

உள்நாட்டு போரில் கொழும்பு ஈடுபட்டு வருவதால் 1990–களில் இந்தியாவும் மேற்குலகமும் இலங்கைக்கான ஆயுத விநியோகங்களை மட்டுப்படுத்திய போது சீனாவே இலங்கையின் பிரதான ஆயுத விநியோகத்தராக செயற்பட்டு வந்தது.

இலங்கையில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் சிறிலங்காவுக்கான படைத்துறை உதவிகளை அமெரிக்கா இடைநிறுத்தய போது சீனா இலங்கைக்கான ஆயுத உதவிகளை 2007 – களில் பல மடங்கு அதிகரித்திருந்தது.

உலகின் மொத்த ஆயுத விற்பனையில் சீனா 4 வீதத்தை கொண்டுள்ளது. பிரித்தானியா 8 வீதத்தையும் அமெரிக்கா 40 வீதத்தையும் கொண்டுள்ளன.

இலங்கையில் சிறிய மீன்பிடி கிராமத்தை சீனாவின் நிறுவனங்கள் பாரிய துறைமுகமாக அபிவிருத்தி செய்து வருகின்றன. அம்பாந்தோட்டையில் பில்லியன் டொலர் செலவில் நிர்மாணிக்கப்படும் இந்த துறைமுகம் சீனாவின் கடற்படை கப்பகான எரிபொருள் நிரப்பும் மையமாக தொழிற்படலாம்.

சீனாவின் தொழிற்சாலைகளுக்கு தேவையான எரிபொருள்கள் இந்த பாதையினால்தான் கொண்டுவரப்படுவது உண்டு. அதற்கு பாதுகாப்பாக சீனாவின் கடற்படை செயற்பட்டு வருகின்றது . இந்த கப்பலுக்கான எரிபொருள் நிரப்பும் துறைமுகமாக அம்பாந்தோட்டை வரும் காலத்தில் செயற்படும்.

இதன்பொருள் என்னவெனில் அம்பாந்தோட்டை ஒரு நாள் சீனாவின் கடற்படை தளமாக மாற்றமடையலாம். சிலர் அவ்வாறு இருக்காது என எண்ணலாம். ஆனால் அதுதான். உண்மை. சீனாவின் படைத்துறை திட்டமிடல் அதிகாரிகள் தொலை நோக்கு பார்வை உடையவர்கள்.

தாய்வானுடன் மோதல் ஏற்படும் சமயத்தில் அது சீனாவின் கடற்பாதைகளில் தடையை ஏற்படுத்துமா? இவ்வாறான பாதகமான நிலைமைகளைதான் சீனாவின் திட்டமிடல் அதிகாரிகள் தமது மனதில் கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இவ்வாறான சந்தர்பங்களில் சீனாவுக்கு தூரமான இடங்களில் நண்பர்கள் தேவை. எனவே தான் அவ்வாறான உறவுகளை இலங்கை மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் அது ஏற்படுத்தி வருகின்றது. பாகிஸ்தானில் ஹெடார் துறைமுகத்தை சீனா நிர்மாணித்துள்ளது எனஅதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–5)

# மருத்துவர் சண்முகராஜா படுகாயம் ஏனைய இருவரும் வவுனியாவில்!

(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் பகுதியில் கடும் தாக்குதல் நிகழ்ந்து கொண்டிருந்த வேளையில் அங்கு நின்று படுகாயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளித்துக் கொண்டிருந்த ஆறு மருத்துவர்களும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் ஒருவர் படுகாயமடைந்திருப்பதால் அவசர சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அதேவேளையில் மற்றையவர்கள் ஓமந்தை சோதனைச் சாவடியில் விசாரணைகளுக்காகத் தங்கவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

முள்ளிவாய்க்கால் மருத்துவமனையில் அது தாக்கியழிக்கப்படும் வரையில் பணியாற்றிய மருத்துவ அத்தியட்சகர் சண்முகராஜாவும் அவரது குடும்பத்தினரும் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்களான மருத்துவர்கள் வரதராஜா ,சத்தியமூர்த்தி உட்பட ஆறு மருத்துவர்கள் முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து வெளியேறி இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள ஓமந்தைச் சோதனைச் சாவடிக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை வந்து சேர்ந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து வரும்போது இடம்பெற்ற தாக்குதல்களில் மருத்துவர் சண்முகராஜா படுகாயமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து இவர் வவுனியாவிலிருந்து மருத்துவ சிகிச்சைக்காக என உலங்குவானூர்தி மூலமாக் கொண்டு செல்லப்பட்டபோதிலும் அவர் எங்கே கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்பது தொடர்பான தகவல்கள் எதுவும் தெரியவில்லை .இது தொடர்பா க இராணுவ அதிகாரிகளும் தகவல் எதனையும் தெரிவிக்கவில்லை.

மருத்துவர் வரதராஜா ,சத்தியமூர்த்தி ஆகியோர் ஓமந்தை சோதனைச் சாவடியில் தொடர்ந்தும் தங்க வைக்கப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதர்க தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவர்களுடன் முள்ளியவளையிலிருந்து வெளியேறி வவுனியா வந்து சேர்ந்த மேலதிக அரசாங்க அதிபர் கே.பார்த்தீபன் வவுனியா இடைத்தங்கல் முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ–5)

## தேசிய நூலகவார இறுதிநாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபை பொது நூலகம் நாவற்குழி நூலக அபிவிருத்தி ஆலோசனை சபையால் நடத்தப்படும் தேசிய நூலக வார இறுதி நாள் நிகழ்வு இன்று பிற்பகல் 2மணிக்கு நாவற்குழி பொது நூலக மண்டபத்தில் சா.பி.ச . நாவற்குழி உப பணிமனை பொறுப்பதிகாரி சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக ஓய்வு பெற்ற அதிபரும் சாவகச்சேரி, தனங்கிளப்பு நூல் எழுத்தாளர் வ.சின்னப்பா கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக சாயி கல்வி நிலைய இயக்குநர் செ.பத்மநாதன் நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் திருமதி வ.மேகலிங்கம் கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை அதிபர் எஸ்.சோமசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(6–4)

## உயர்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தினால் க.பொ.த. உயர்தரம் 2009 /2011வகுப்புகளில் கல்வி பயிலும் வறுமைக் கேட்டுக்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரிவில் பெற்று பாடசாலை அதிபர்,கிராம சேவகர்,உதவி அரச அதிபர் ஆகியோரின் உறுதிப் படுத்தலுடன் எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் பிரிவுக் காரியாலயத்தில் கையளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (6–4)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி தன்னடக்கம்



ஆன்மீக வாழ்க்கையில் நான் இன்பமடையவில்லை என்றால் புலனின்ப வாழ்க்கையில் திருப்தியை நாட வேண்டுமா ; எனக்கு அமுதம் கிடைக்கவில்லை என்பதற்காக சாக்கடை நீரைக் குடிக்கவேண்டுமா?

இன்பம் மனிதன் முன்தோன்றும் போது, தனது தலைமீது துன்ப முடியைச் சூடி வருகின்றது. இன்பத்தை வரவேற்பவன் துன்பத்தையும் வரவேற்றே ஆகவேண்டும்.

அரசியல் வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் ஒருவன் சுதந்திரம் பெறலாம். ஆனாலும் ஆசைகளுக்கும் சினத்திற்கும் அவன் அடிமையாக இருந்தால் , உண்மையான சுதந்திரத்தின் தூய இன்பத்தை உணர முடியாது.

தன் விருப்பத்திற்கு உகந்த வேலையாக இருந்தால் எந்த முட்டாளும் அதனைச் செய்து முடிப்பான் . ஆனால் எவ்வேலையையும் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவன் எவனோ அவனே அறிவாளி . ஒரு வேலையும் அற்பமானதல்ல.

# புலம் பெயர்ந்த தமிழர்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள்

வன்னியில் இலங்கை படையினரால் திட்டமிட்டவகையில் நடத்தப்படும் தமிழினப் படுகொலையைக் கண்டித்தும் உலக நாடுகள் இலங்கைக்கு போரை நிறுத்த அழுத்தம் கொடுக்குமாறு வலியுறுத்தியும் புலம்பெயர் தமிழர்களால் இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க் போன்ற நாடுகளில் போராட்டங்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

### இத்தாலியில் அடங்காப்பற்று

இத்தாலி வாழ் தமிழ் உறவுகளால் அடங்காப்பற்று பேரெழுச்சி ஊர்வலம் நேற்று முன் தினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு



ரெஜீயோ எமிலியாவின் பிரதான புகையிரத நிலையத்துக்கு அண்மையில் ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் இத்தாலி மேற்பிராந்தியத்திலிருந்து 1500க்கு மேற்பட்ட தமிழ் உறவுகள் வயது வேறுபாடின்றி கலந்துகொண்டனர். எம்மின மக்கள் மீது நடாத்தப்படும் இனப்படுகொலைகளை உடனே தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோசங்களை எழுப்பியவாறு சர்வதேசத்திற்கும் இத்தாலிய அரசுக்கும் எடுத்துச் சொல்லுமுகமாக இத்தாலிய மொழியிலுள்ள துண்டுப்பிரசுரங்கள், ஆவணப்படங்கள், காணொளி தொகுப்புக்கள் அடங்கிய குறுந்தட்டுக்கள் போன்றவற்றை விநியோகித்து இத்தாலிய மக்களின் கவனத்தை ஈர்த்தனர்.

சர்வதேசத்தின் பாராமுகத்தை வெளிப்படுத்து முகமாக வாயைக் கறுப்புத்துணியால் கட்டியவாறும் பதாதைகளை ஏந்தியவாறும் உணர்வுபூர்வமாக கலந்துகொண்டதை பிராந்திய ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து பதிவு செய்ததை கவனிக்கக்கூடியதாக இருந்தது.

### பிரான்சில் உண்ணா நிலைப் போராட்டம் நிறைவு மக்கள் எழுச்சிப் போராட்டம் தொடர்கிறது

இலங்கை அரசின் தமிழின அழிப்பை நிறுத்தக் கோரி பிரான்சில் மிகவும் உணர்வு பூர்வமாகவும் தியாக உணர்வோடும் நடைபெற்று வந்த உண்ணா நிலைப்போராட்டம் நிறைவடைந்து மக்கள் எழுச்சிப் போராட்டம் தொடர்கின்றது.

42 ஆவது நாளை எட்டியுள்ள மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் கடந்த 39 நாட்களாக செல் வக்குமார் நவநீதன் ஆகியோர் தமது உடலை உருக்கி மக் களுக்கான தியா கத்தை பிரான்சு மண்ணில் பல அழுத்தங்கள் மத்தியிலும் தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்தனர்.

நேற்று முன் தினம் தன்னெழுச்சியாகத் திரண்ட தமிழ் மக்கள் இலங்கைத் தூதரகம் நோக்கி பெரும் படையாக சென்றனர். கோபங்களையும் வேதனைகளையும்தாங்கி தூதரகம் அமைந்துள்ள பகுதியிலுள்ள வீதிகளில் இறங்கிய மக்கள் பெரும் கொதிப்புடன் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தத. பின்னர் அப்பிரதேசத்திற்கு வந்த பிரெஞ்காவல் துறையினரால் மக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். அங்கிருந்த அனைத்து மக்களும் உண்ணா நிலைப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் லாசப்பல் பகுதிக்கு வருகை தந்து தமது போராட்டத்தை தொடர்ந்தனர்.




### ஜேர்மனியில் டுசில்டோவ் பிரதான தொடருந்துப் பாதைகள் தமிழ் மக்களால் முற்றுகை

வன்னியில் தமிழ் மக்கள் வகை தொகையின்றி கொல்லப்படுவ தையடுத்து ஜேர் மனியில் நேற்று முன்தினம் உக்கிரமடைந்த தமிழ் மக்களின் கவனயீர்ப்புப் போராட்டத்தின் தொடர்ச்சியாக நேற்று மதியம் 3 மணியளவில் டுசில் டோவ் பிரதான புகையிரத நிலை யத்தில் கூடிய தமிழ்மக்கள் திடீரென கடுகதி தொடருந்துகள் சேவையில் ஈடுபடும் தொடருந்துப் பாதையில் இறங்கி தொடருந்துப் பாதையை முற்றுகையிட்டனர். இதனையடுத்து டுசில்டோவ் ஊடான சகல தொடருந்துப் போக்குவரத்துகளும் நிறுத்தப்பட்டன.

டுசில்டோவ் நோக்கி இரு புறம் இருந்தும் வந்த தொடருந்துகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டன. தொடருந்துகள் அனைத்தும் பல மணிநேரம் தாமதமடைந்தன. அவ்விடத்துக்கு உடனே வருகை தந்த காவற்துறையினர் தொடருந்துப் பாதைகளில் இருந்த மக்களுடன் பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

இலங்கை படைகளால் தமிழ் மக்கள் வகை தொகையின்றி கொல்லப்படும் நிலையில் ஜேர்மனிய ஊடகங்களில் இது தொடர்பான செய்திகள் எதுவும் வெளி வருவதில்லை எனத் தெரிவித்த மக்கள் உட னடியாக ஊடகங்கள் இவ்விடத்திற்கு வருகை தரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்ததுடன் ஜேர்மனிய அரசு இனப்படுகொலையை நிறுத் துவதற்குரிய நடவடிக்கையை உடன் எடுக்க வேண்டும் எனக்கோரிக்கையும் விடுத்தனர். இவற்றை ஏற்றுக்கொண்ட காவற்துறையி னர் உரிய இடங்களுக்கு விடயத்தை தெரியப் படுத்துவதாகத் தெரிவித்ததுடன் இவ்விடத்தை விட்டு அகன்று தொடருந்துகள் சேவையில் ஈடுபட அனுமதிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

### டென்மார்க் நகரங்களிலும் கவனயீர்ப்புப்போராட்டங்கள்

போராட்ட ஊர்வலமானது நகரவீதிகளினூடாக ஒரு நாற்சந்தியை அடைந்ததும் தமிழ் மக்கள் தங்கள் உணர்வு கட்டுக்கடங்காமல் வீதியில் இறங்கி வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர்.

அவ்விடத்திற்கு வந்த நகரப் பொலிஸார் வீதியில் நின்ற அனைத்துத் தமிழ் மக்களையும் பலவந்தமாக அப்புறப்படுத்த முற்பட்டனர்.

இவ்வேளை அங்கே வாகனப் போக்குவரத்துகள் 2 மணித்தியாலங்கள் ஸ்தம்பித மடைந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# வடக்கின் பேரவலத்தை அரசுக்குக் கிடைத்த வெற்றி எனக்கூறுவது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்

## புதிய ஜனநாயகக் கட்சி கண்டனம்

(கொழும்பு)

தமிழ் மக்களை மீட்கும் மனிதாபிமான நடவடிக்கை எனப் படும் அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளினால் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இலட்சக் கணக் கானோர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். அகதிகளாக்கப்பட்டுள்ளோரில் அதிகமானோர் படுகாயங்களுக்குட்பட்டு முடமாக்கப் பட்டுள்ளனர். பலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட் டுள்ளனர்.

இந்தப் பேரவலத்தைத் தான் பயங்கரவாதத்திற்கு எதி ராகக் கிடைத்த வெற்றி என்றும் தமிழ் மக்களுக்கு கிடைத்த வெற்றி என்றும் பேரினவாதிகள் கூறுகின்றனர்.

இதனை எமது கட்சி கண்டிப்பதுடன் இதனைக் கண்டிக்கும் முற்போக்கு ஜனநாயக இடது சாரி சக்திகளுடன் ஒரு மைப்பாட்டை தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு புதிய ஜனநாயகக்கட்சியின் தேசிய செயல கத்தின் சார்பில் அதன் தேசிய அமைப்பாளர் இ.தம்பையா விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

இப்பேரவலம் ஏற்படாமல் இருக்கவே இராணுவ நடவடிக்கைகளுக்கு மாறாக தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தொடர்ந்து வற்புறுத்தி வந்தோம்.

அத்துடன் வெளிநாட்டுத் தலையீடுகளும் அழுத்தங்களும் ஏற்படும் என்பதைப் பற்றியும் எச்சரித்து வந்தோம்.

பேரவலத்திற்குள்ளாகி துன்பத்துடனும் ஆத்திரத்துடனும் இருக்கும் தமிழ் மக்களுக்கு வெளிநாட்டு தலையீடுகள் அழுத்தங்களினால் மீட்சி கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது. பேரவலத்தைக் கண்டித்து வெளியிடப்பட்டுள்ள ஐ.நா. சபையினதும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வினதும் அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின் டனதும் ஐரோப்பிய ஒன்றியத்தினதும் அறிக்கைகள் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பது போன்றும் தமிழ் மக்களுக்கு ஆறுதல் அளிப்பது போன்றும் இருக் கலாம்.

இப்பேரவலத்திற்கு அந்நிய தலையீடுகளும் காரணம் இராணுவ நடவடிக்கைகளே எனினும் இன்றைய சர்வதேச சூழலில் அந்நிய தலையீடுகள் ஏகாதிபத்திய மேலாதிக்க அக் கறைகளுக்கு அப்பாற்பட்டவையாக இராது. அவை நாட்டின் சுதந்திரம் இறைமை ,சுயாதிபத்தியம் ,தேசிய இனங்களினது சுய நிர்ணய உரிமை என்பவற்றுக்கு பாதகமானதாகும்.

ஏகாதி பத்தியமும் மேலாதிக்க சக்திகளும் சுதந்திரமான அரசொன்றினதோ அடக்கப் படும் தேசிய இனத்திற்கோ நண்பர்களாக இருக்க முடியாது.

ஆனால் தொடரும் பேரவல மும் இராணுவ நடவடிக்கைகளும் நேரடியான அந்நிய தலையீடுகளை விரைவாகக் கொண்டுவரும் என்ற அபாயத்தை நிராகரிக்க முடியாது. அவ்வாறான தலையீடுகள் மேலும் பாரிய அழிவுகளையே ஏற்படுத்தும்.

எனவே அதிகரித்து வரும் பேரவலத்திற்கு அந்நிய தலை யீடுகளுக்கும் காரணமான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி ,பேரவலத்திற்குள்ளான தமிழ் மக்களுக்கு இயல்பு வாழ்வை ஏற்படுத்திக்கொடுத்து தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட அனைத்து முற்போக்கு ,இடது சாரி ,ஜன நாயகசக்திகளும் ஐக்கியப்பட்டுசெயற்படவேண் டி யது அவசியமாகும். (6)

# இயற்கைச் சீற்றங்களின் ஆபத்து அதிகரிப்பு; ஐ.நா எச்சரிக்கை

(லண்டன்)

புவி வெப்பமடைந்து வருதல் , சுற்றாடல் மோசமடைந்துவருதல் ,வளர்ச்சிப்பணியில் மோசமான திட்டமிடல் ஆகியவற்றின் ஓர் மோசமான கலவை காரணமாக உலகில் இயற்கைப் பேரழிவுகள் ஏற்படுவதற்கான ஆபத்து அதிகரித்துவருவதாக ஐ.நா.மன்ற அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

ஆபத்துப்பற்றி முன்கூட்டியே மதிப்பிடும் முறையான நடவடிக்கைகள் ஒழுங்காக மேற்கொள்ளப்படுவதில்லை என்பதால் பல இலட்சக்கணக்கான உயிர்கள் ஆபத்தின் பாதையில் தள்ளப்படுவதாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

திட்டக்கொள்கைகளில் செல்வந்த நாடுகளுக்கும் வறியநாடுகளுக்குமிடையே காணப் படும் வித்தியாசத்தையும் முரண்பாடுகளையும் இந்த அறிக்கை கோடி காட்டியது. (6)

# இடம்பெயர்ந்த மக்களின் சுகாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு புதிய செயற்றிட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்த பொதுமக்களின் அடிப்படை சுகாதார தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு புதிய செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக் கின்றது.

இதன் பிரகாரம் வவுனியாவில் அமைக்கப் பட்டுள்ள நிவாரணக் கிராமங்களில் சகல தற்காலிக் வீடுகளுக்குச் சென்று சிகிச்சைகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்க அதிகாரிகளை நியமித்துள்ளதாக மக்கள் சுகாதார பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித்த மஹிபாலா தெரிவித்துள்ளார்.

சிறுவர் முதல் முதியோர் வரை சகலருக்கும் தேவையான அடிப்படை சுகாதார வசதிகள் தொடர்பாக இவர்கள் கவனம் செலுத்துவதாகவும் அதற்கமைய சிகிச்சை தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே இந்த மக்களுக்கு சிகிச்சை அளிக்கும் பிரிவுகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிகிச்சைப்பிரிவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக சகல வலயங்களிலும் பிரதான மத்திய நிலையங்கள் மற்றும் அடிப்படை மத்திய சிகிச்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதா கவும் அவர் தெரிவித்தார்.

வைத்தியர்கள் தற்போது சிகிச்சை அளிக்கும் நடவடிக்கை களை ஆரம்பித்துள்ளதாகவும் நோய் நிவாரணப்பிரிவு களில் சுகாதார அதிகாரிகள் நலன்புரி நடவடிக்கைகளை முன்னெ டுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (6)

# யுவராஜ் சிங் பந்துவீச்சில் அசத்தல்; பஞ்சாப் அணி ஒரு ஓட்டத்தால் வெற்றி

## இறுதி வரை போராடிய டெக்கான் அணிக்கு அதிர்ச்சி



(ஜோகனஸ்பேர்க்)
யுவராஜ் சிங்கின் துல்லியமான பந்து வீச்சின் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி இறுதி வரை போராடி ஒரு ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் 2ஆவது இருபது-20 தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று ஜோகனஸ் பேர்க்கில் நடைபெற்ற லீக் சுற்றின் 49 ஆவது போட்டியில் யுவராஜ் சிங் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் அடம் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி ஆரம்பத்தில் சொகால் 09, போமெர்ஸ்பாஷ் 01, ஹட்ரிச் 11, அணித்தலைவர் யுவராஜ் சிங் 20 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்க 8.5 ஓவர்களில் 52 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

எனினும் குமார் சங்கக்காரவின் சிறப்பான அரைச்சதத்தின் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களை எடுத்தது.

இதில் குமார் சங்கக்கார 43 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 56 ஓட்டங்களையும் இர்பான் பதான் 11 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 17 ஓட்டங்களையும் மோட்ரா 12 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஆர்.பி.சிங். 3 விக்கெட்டுக்களையும் சைமண்ட்ஸ், ரி.எஸ்.சுமன் மற்றும் வேணுகோபால் ராவ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 135 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு கில்கிறிஸ்ட்-கிப்ஸ் ஜோடி அதிரடியான ஆரம்பத்தை வழங்கியது.

எனினும் கில்கிறிஸ்ட் 13 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 23 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்ததுடன் தொடர்ந்துகளமிறங்கிய ரி.எஸ்.சுமன் தான் சந்தித்த முதலாவது பந்திலேயே பூச்சியத்துடன் ஆட்டம் இழக்க டெக்கான் சார்ஜர்ஸ் அணி 4.3 ஓவர்களில் 34 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

இந்நிலையில் 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த கிப்ஸ்-சைமண்ட்ஸ் ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

எனினும் கிப்ஸ் 26, சைமண்ட்ஸ் 25 ஓட்டங்களுடனும் வேணு கோபால் ராவ் பூச்சியத்துடனும் அடுத்தடுத்து ஆட்டம் இழக்க டெக்கான் சார்ஜர்ஸ் அணி 13.2 ஓவர்களில் 79 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

தொடர்ந்து களமிறங்கிய ரோகித் சர்மா அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி டெக்கான் சார்ஜர்ஸ் அணியை சரிவிலிருந்து மீட்டு இறுதி ஓவரில் 11 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலைக்கு தூக்கி நிறுத்தினார்.

எனினும் ரோகித் சர்மா 26 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 42 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்க டெக்கான் சார்ஜர்ஸ் அணி 19.3 ஓவர்களில் 131 ஓட்டங்களை எடுத்து 7ஆவது விக்கெட்டை இழந்தது.

அடுத்து வந்த ஆர்.பி.சிங் பூச்சியத்துடன் ஆட்டம் இழக்க டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து ஒரு ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ஹரிஸ் ஆட்டம் இழக்காமல் 2 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் யுவராஜ் சிங் 4 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் இர்பான் பதான், பவார் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் வெற்றிக்கு வழி சமைத்த அணித்தலைவர் யுவராஜ் சிங் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி தான் விளையாடிய 13ஆவது போட்டியில் 7 ஆவது வெற்றியைப் பெற்றது.

இதேவேளை டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 13 ஆவது போட்டியில் 6ஆவது தோல்வியைச்சந்தித்தது.

## புள்ளிகள் பட்டியல்

| அணிகள் | போட்டிகள் | வெற்ற | தோல்வ் | சமநிலை | முடிபு இல்லை | புள்ளிகள் | சராசரி ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| டில்லி டேர்டேவில்ஸ் | 12 | 9 | 3 | 0 | 0 | 18 | +0.313 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 12 | 7 | 4 | 0 | 1 | 15 | +1.021 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 13 | 7 | 6 | 0 | 0 | 14 | +0.265 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 13 | 7 | 6 | 0 | 0 | 14 | -0.423 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 13 | 6 | 6 | 0 | 1 | 13 | -0.360 |
| பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் | 12 | 6 | 6 | 0 | 0 | 12 | -0.309 |
| மும்பை இந்தியன்ஸ் | 13 | 5 | 7 | 0 | 1 | 11 | +0.401 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 12 | 1 | 10 | 0 | 1 | 3 | -0.973 |

## டி வில்லியர்ஸ் அதிரடியில் டில்லி வெற்றி ராஜஸ்தான் றோயல்ஸ் அணி சோகம்

(புலோம்போன்ரைன்)
டி வில்லியர்ஸின் அதிரடியான அரைச்சதத்தின் மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வீழ்த்தியது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று புலோம் போன்ரைனில் நடை பெற்ற லீக் சுற்றின் 50ஆவது போட்டியில் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி ஆரம்பத்தில் காம்பீர் 08 ஓட்டங்களுடனும் சேவாக் 02 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்க 2.5 ஓவர்களில் 15 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

எனினும் 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த டி வில்லியர்ஸ்-டில்சான் ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி சரிவிலிருந்து மீண்டெழுந்தது.

இதில் டில்சான் 41 பந்துகளில் (ஒரு பவுண்டரி அடங்கலாக) 33 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்க டில்லி டேர் டேவில்ஸ் அணி 16.4 ஓவர்களில் 102 ஓட்டங்களை எடுத்து 3 ஆவது விக்கெட்டை இழந்தது.

இந்நிலையில் 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்த டி வில்லியர்ஸ்-டினேஷ்கார்த்திக் ஜோடியின் அதிரடியில் டில்லி டேர் டேவில்ஸ் அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஏ பி டி வில்லியர்ஸ் 55 பந்துகளில் (8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 79 ஓட்டங்களையும் டினேஷ் கார்த்திக் 11 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடங்கலாக) 23 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் முனாப் பட்டேல் 2 விக்கெட்டுக்களையும் போத்தா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 151 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இதில் போத்தா 31 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 37 ஓட்டங்களையும் ஜடேஜா 18 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 24 ஓட்டங்களையும் முனாப்பட்டேல் ஆட்டம் இழக்காமல் 10 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 23 ஓட்டங்களையும் றயூட் 11 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மிஸ்ரா 3 விக்கெட்டுக் களையும் சாவ்லி, மஹரூப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் நான்ஸ், நெகரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி தான் விளையாடிய 12ஆவது போட்டியில் 9 ஆவது வெற்றியைப் பெற்றது.

இதேவேளையில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தான் விளையாடிய 13ஆவது போட்டியில் 7ஆவது தோல்வியை சந்தித்தது.

## இரண்டாவது டெஸ்ட்

## அன்டர்சனின் துல்லியமான பந்துவீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் பொலோனானது

(செஸ்ரர்-லீ-ஸ்ரீட்)
அன்டர்சனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் 310 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து பொலோன்நிலைக்குத்தள்ளப்பட்டது.

இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் 2ஆவது டெஸ்ட் கடந்த 14ஆம் திகதி செஸ்ரர்-லீ-ஸ்ரீட்டில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 569 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் குக் 160 ஓட்டங்களையும் ரவி பொப்ரா 108 ஓட்டங்களையும் பிறிர் 63 ஓட்டங்களையும் கொலின் வூட் ஆட்டம் இழக்காமல் 60 ஓட்டங்களையும் பீற்றர்சன் 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பென் 2 விக்கெட்டுக்களையும் எட்வோட்ஸ், பாக்கர், ஹயில் மற்றும் சிம்மோன்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 310 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையில் இருந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி பொலோன் நிலைக்குத் தள்ளப்பட்டு தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடுமாறு இங்கிலாந்து அணியால் நிர்ணயிக்கப்பட்டது.

இதில் ராம் நரேஷ் சர்வான் 100 ஓட்டங்களையும் ராம் டீன் 55 ஓட்டங்களையும் பென் 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அன்டர்சன் 5 விக்கெட்டுக்களையும் பிரோட் 3 விக்கெட்டுக்களையும் ஒனி ஓன்ஸ் ஒரு விக்கெட்டையும் பதம் பார்த்தனர்.

இந்நிலையில் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 115 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் அணித்தலைவர் ஹையில் 43 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 54 ஓட்டங்களையும் சர்வான் 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஒனி ஓன்ஸ் 2 விக்கெட்டுக்களையும் சுவான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஐந்தாவதும் இறுதி நாளான ஆட்டம் இன்றாகும்.

# போரில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் வரை அமைச்சரவையில் தி.மு.க. பங்குபற்றாது

## கலைஞர் நேற்று அறிவிப்பு

ஈழத்தில் போர் முனையில் சிக்கிக்கொண்டுள்ள ஐம்பதாயிரம் தமிழர்களும் பாதுகாப்பாக மீட்கப்பட்ட பின்னரே அமைச்சரவையில் சேருவது பற்றி முடிவு செய்யப்படும் என்று கலைஞர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

இதனால் மத்திய அரசுக்கு தி.மு.கவின் ஆதரவு இல்லை என்று பொருளாகி விடாது. அரசுக்கு வெளியில் இருந்து மட்டுமே ஆதரவு கொடுக்க முடிவு செய்துள்ளோம் என்று நேற்று கூடிய தி.மு. கழக செயற் குழுவில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேறியுள்ளது. இது பற்றி தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன் கூறுகையில்,

தமிழக முதல்வர் மனச்சாட்சியின் பேச்சைக் கேட்பவர். அதனால் தான் யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் திடீரென்று அதிகாலையில் எழுந்து அண்ணா சமாதிக்கு சென்று உண்ணாவிரதம் இருந்தார். இப்போதும் அதே மனச்சாட்சியின் படிதான் இந்த அதிர்ச்சிகரமான முடிவை எடுத்துள்ளார்.

ஈழத் தமிழருக்கும் தமிழ் மொழிக்கும் கலைஞர் ஒரு துரோகி என்று தன்னை அபாண்டமாக சித்திரித்த எதிர்க்கட்சிகள் தேர்தலில் மண்ணைக் கௌவி விட்டாலும் கலைஞர் நெஞ்சில் ஏற்பட்ட அந்த வடு மட்டும் இன்னும் நீங்கவில்லை.

ஐம்பதாயிரம் தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்து கொண்ட பின்னரே அமைச்சரவையில் சேருவது பற்றி தி.மு.க. செயற்குழு முடிவெடுக்கும். இவ்வாறு பேராசிரியர் அன்பழகன் நிருபர்களிடம் கூறினார்.

பிரபாகரன் குறித்து ஏதேனும் கோரிக்கை வைப்பீர்களா என்று நிருபர்கள் கேட்டதற்கு,

கோரிக்கையைப் பிரபாகரனிடமும் வைக்க வேண்டும் அல்லவா? இதுவரை அவரிடம் தமிழகத் தலைவர்கள் யாரும் கோரிக்கை வைத்ததாக தெரியவில்லையே. அப்பாவி மக்கள் வெளியேறினால் அவர்களை தடுக்க வேண்டாம் என்ற கோரிக்கை யைத் தம்பி பிரபாகரனிடம் வைப்போமே தவிர அவரைப் பற்றிய கோரிக்கையை அரசிடம் வைக்க மாட்டோம். இது அப்பாவி பொதுமக்களுக்கான கோரிக்கை மட்டும் தான். அவர்கள் பாதுகாப்புக்கு மத்திய அரசு உத்தரவாதம் கொடுத்தால் மட்டும் போதுமானது என்று பேராசிரியர் அன்பழகன் மேலும் விளக்கம் அளித்தார். (ச-5)

## கொழும்பு...

ஆசி வேண்டி இந்து, பௌத்த, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மத அனுட்டானங்கள் இடம்பெற்றன. இதேவேளை நாடு விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர் கொழும்பின் பல பகுதிகளிலும் தேசியக் கொடிகள் பறக்க விடப்பட்டு, பட்டாசு கொளுத்தி கொண்டாட்டங்கள் இடம்பெறுகின்றன. (ச-5)

## இன்று...

கொண்டவர்களும் அவசர தேவையின் நிமித்தம் செல்வதற்கு செயலகத்தில் பதிவினை மேற்கொண்டவர்களும் இன்று காலை 7 மணிக்கு யாழ்.புகையிரத நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ச)

## கால்பந்து மைதான...

இன்னும் எஞ்சியிருக்கிறது.

விடுதலைப் புலிகளிடமிருந்து அப் பிரதேசத்தையும் இன்று இரவோ (நேற்று) நாளையோ (இன்று) மீட்டு விடுவோம் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமது ஆயுதப் பயன்பாட்டை நிறுத்தப் போவதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளமை தொடர்பாக அவரிடம் பி.பி.சி தொடர்பு கொண்டு கேட்டபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இனி வன்னியில் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் பயன்படுத்துவது நிறுத்தப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை.எல்லாத் துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டு விட்டன. இந்த சிறிய பகுதியில் விடுதலைப் புலித் தலைவர்கள் எஞ்சியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

பிரபாகரன் உள்ளிட்ட தலைவர்கள் கொல்லப்பட்டு விட்டார்களா? தற்கொலை செய்து கொண்டார்களா?என்பதை இச் சிறு பகுதியை நாம் கைப்பற்றிய பின்னர்தான் பார்க்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் எம்மிடம் சரணடைவது குறித்து எந்த நாடும் எம்மிடம் பிரஸ்தாபிக்கவில்லை. எங்களது கவலையும், ஏன் அந்த நாடுகளின் கவலையும் பொதுமக்களின் நிலை குறித்துதான் என்று நினைக்கிறேன்.நாம் பொதுமக்களை மீட்டுவிட்டோம். இனி இருக்கும் வேலை ஒளிந்திருக்கும் புலிகளைப் பிடிப்பதுதான் என்று அவர் கூறியுள்ளார். (ச-14)

## ஈழத் தமிழ் மக்கள்...

பி.பி.சிக்கு கருத்துத் தெரிவித்த நாராயணன் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இறுதிக்கட்ட போர் நடைபெற்று வரும் நிலையில் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் இலங்கை பிரச்சினை தொடர்பாக ஆராய நேற்று முன்தினம் கூட்டம் நடைபெற்றது.

பிரதமர் தற்போதைய போர் நிலைவரம் குறித்து கேட்டறிந்தார். குறிப்பாக போர்ப் பகுதியில் சிக்கியுள்ள பொது மக்களின் நிலை குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. நேற்று முன்தினம் மட்டுமன்றி தினமும் என்னுடனும் உள்துறை அமைச்சர் மற்றும் மூத்த அதிகாரிகளுடனும் பிரதமர் தொடர்பு கொண்டு ஆலோசனை நடத்தி வருகின்றார்.

உக்கிரமான போர் நடைபெற்று வரும் நிலையில் அப்பாவி பொது மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் உயிரிழப்புக்களை தடுக்க வேண்டும் என்பது தான் இந்தியாவின் கவலை. அதற்காக இலங்கை அரசுடன் இந்திய அதிகாரிகள் தினசரி தொடர்பில் இருக்கிறார்கள்.

போர்ப் பகுதியிலிருந்து வெளியேறி வந்துள்ள தமிழ் மக்களுக்கு உரிய வகையில் நிவாரண உதவிகள் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வது குறித்தும் இலங்கை அரசுடன் இந்தியா தினசரி தொடர்பு கொண்டு வருகிறது என்று அவர் தெரிவித்தார். (ச-14)

## நிரந்தர சமா...

தொண்டு நிறுவன குழுக்களின் பணி அவசியமாகையால் பணியாளர்களை அப்பகுதிகளுக்கு அனுப்ப அரசாங்கம் முன்வர வேண்டும் என பரிசுத்த பாப்பரசர் 16-வது பெனடிக் வலியுறுத்தியுள்ளார்.

அவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி அவசரமாக தேவைப்படுகின்ற மருந்து, உணவு மற்றும் சுத்தமான நீர் போன்றவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

தொண்டு நிறுவனக் குழுக்கள் மோதல் பிரதேசங்களில் உள்ள பொதுமக்களை அனைவருக்கும் பராபட்சமற்ற முறையில் பணியாற்ற வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார். (ச-5)

## பாதுகாப்பு வலயத்திலிருந்து...

ஏப்ரல் 20-23 வரையான காலப் பகுதியில் புதுமாத்தளன் பகுதியிலிருந்து ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வெளியேறிய பின்னர் புலிகளின் பிடியிலிருந்த எஞ்சிய பகுதிகளில் மேலும் ஒரு இலட்சம் வரையிலான மக்கள் இருப்பதாக நம்பப்பட்டது.

எனினும் இந்தப் பகுதியில் சுமார் 50 ஆயிரம் வரையிலான பொதுமக்கள் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையும், 15-20 ஆயிரம் பொதுமக்களே அங்கு எஞ்சியிருப்பதாக இலங்கை அரசாங்கமும் கூறிவந்தன.

இந்த நிலையில் கடந்த 24 மணிநேரத்தில் இந்தப் பகுதிகளிலிருந்த சுமார் 36 ஆயிரம் பேரை மீட்டிருப்பதாக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது.

பாதுகாப்பு வலயப் பகுதிகளிலிருந்து அனைத்துப் பொதுமக்களும் மீட்கப்பட்டு விட்டதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் பின்னர் அறிவித்தது.

வன்னியில் இன்னமும் புலிகளின் பிடியில் இருக்கும் பகுதிகள் மீது படையினரின் பிடி மேலும் இறுக்கப்பட்டிருப்பதாக படைத்தரப்பு கூறியுள்ளது. 400-600 சதுர மீற்றர் நிலப்பரப்புக்குள் இப்போது விடுதலைப் புலிகள் முற்றுகையிடப்பட்டிருப்பதாக அது தகவல் வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு வலய பிரதேசத்துக்குள் சிக்கியிருந்த 50ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கடந்த இரண்டு தினங்களில் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ள படைத்தரப்பினர் வெகு விரைவில் புலிகளின் கதை முடிந்து விடும் என்று அறிவித்துள்ளனர்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் தலைமை உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் பலருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக பல்வேறு ஊகங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு வலயப் பிரதேசத்துக்குள் உள்ள ஒரு கட்டிடத்துக்குள் முக்கிய தலைவர்கள் பலரும் இருந்து அதனை வெடிக்கவைத்து தற்கொலை செய்து கொண்டதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் பரவி வருகின்றன.

புலிகளின் கதை முடிந்து விட்டது என்ற செய்தியை ஜனாதிபதியின் சகோதரரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாஜ ராஜபக்ஷ ஜோர்தானில் இருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தொலைபேசி வாயிலாக அறியத்தந்ததாகவும், இதன் பின்னரே அவர் தனது பயணத்தை இடையில் முடித்துக் கொண்டு உடனடியாக நாடு திரும்பியதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. எனினும் கோத்தபாய ராஜ பக்ஷ ஜனாதிபதி மகிந்தவுக்கு தெரிவித்த தகவல்கள் தொடர்பான மேலதிக விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

கள நிலைமைகள் தொடர்பான தகவல்கள் அரசாங்கத்துக்கு இப்போது முழுமையாகத் தெரியும் எனவும், எனினும் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ நாட்டுமக் களுக்கு அதனை உத்தியோக பூர்வமாக அறிவிப்பதற்காக இன்னமும் இரகசியம் பேணப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

தற்சமயம் இந்தப்பகுதியில் என்ன நடைபெறுகின்றது என்பது தொடர்பான செய்திகள் எவையும் நேற்றிரவு வரையும் வெளியாக வில்லை.

**புலிகளின் தாக்குதல் முயற்சி முறியடிப்பு!**

மக்கள் முற்றாக வெளியேற்றப்பட்ட நிலையில் மிகச்சிறிய நிலப்பரப்புக்குள் சுற்றி வளைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் நேற்றுக் காலையில் நந்திக் கடல் வழியாக மேற்கொண்ட தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டதாக படைத்தரப்பு கூறியுள்ளது.

புலிகள் இன்னமும் நிலைகொண்டுள்ள பகுதியில் நேற்று பல குண்டுவெடிப்புக்கள் அவதானிக்கப்பட்டதாகவும், இதுபாரிய தற்கொலை முயற்சிகளா அல்லது தமது தளபாடங்கள் மற்றும் ஆவணங்களை அழிக்கும் முயற்சியா என்று தெரியவில்லை என்றும் படைத்தரப்பு முன்னதாக கூறியிருந்தது. (ச-3,5,14)




நீண்டகால இடைவெளியின் பின் மீண்டும் யாழ்.நகரில் அழகிய வர்ணப் பைக்கட்டுக்களில் தரத்தில் அதி உயர்ந்த, விலையில் மிகக்குறைந்த, இலங்கையில் முதல் தர பிஸ்கட்டாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தரம் கொண்ட, லக்கிலாண்ட் பிஸ்கட் தற்போது யாழ்.நகரில் நீங்கள் வாங்கிடலாம். விருந்தினர் வீட்டிற்கு வெறுங் கையுடன் செல்வதா? விருப்பமுடன் எடுத்துச் செல்லுங்கள். விலையில் மலிந்து, தரத்தில் சிறந்து, சுவையில் சுந்தரமாய் திகழும் லக்கிலாண்ட் கிவ்ட் பிஸ்கட் வகைகள்.

**லக்கிலாண்ட் உற்பத்திகளோ பல, நீங்கள் அறிந்திட அவற்றிற் சில**


லக்கிலாண்ட் கிப்ட் வகைகள்
லக்கிலாண்ட் லெமன் பஃவ்
லக்கிலாண்ட் லெமன் கிறீம்
லக்கிலாண்ட் போர் பொன் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் பட்டர் கெறோல்
லக்கிலாண்ட் கஸ்ரட் கிறீம்
லக்கிலாண்ட் மாரி, ஜின்ஜர்
லக்கிலாண்ட் நைஸ்
லக்கிலாண்ட் சோட்டீஸ்
லக்கிலாண்ட் பூ, ஜெம் (GEM) என்னும் பல

Manufactured By :
Luckyland
Biscuit Manufactures
Kundasale, Kandy,
Srilanka.

ஏக விநியோகஸ்தர்கள்: சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி. 021 222 2567
(C-2383)

## மரண அறிவித்தல்

### திருமதி பக்கீர்சாமி (SINGER) இராஜமணி (கனடா)



நெடுந்தீவை பிறப்பிடமாகவும் கன்னாதிட்டி காளிகோவிலடியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான திருமதி பக்கீர்சாமி இராஜமணி நேற்று காலமாகிவிட்டார் இவர் பக்கீர்சாமியின் (Singer) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான துரையப்பா ஆச்சாரி, இளையபிள்ளையின் மகளும் காலஞ்சென்றவர்களான லெட்சுமண ஆச்சாரியார் முல்லையம்மா ஆகியோரின் மூத்த மருமகளும் ராஜனின் பாசமிகு தாயாரும் கீதாவின் பாசமிகு மாமியாரும் ரத்திகா, யாதவன், சாம்பவி ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.காலஞ்சென்ற நவாலி கந்தையா ஆச்சாரி மற்றும் ரெத்தினம் ஆச்சாரி (C.T.B), இராமலிங்கம் ஆச்சாரி, கன்னாதிட்டியைச் சேர்ந்த சிற்பாச்சாரியார் சின்னராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னலெட்சுமி (கனடா), காலஞ்சென்ற வேணுகோபால் ஆச்சாரி மற்றும் அம்புஜம், கமலவல்லி (கொழும்பு), கெங்காதரன் ஆச்சாரி, இராஜேஸ்வரி, ஜெகநாதன் (கொழும்பு), மகேஸ்வரி (ஜேர்மன்), நாகேஸ்வரி (வவுனியா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

காலஞ்சென்ற சின்னத்துரை ஆச்சாரி (தலையாளி) மற்றும் ருக்குமணி, காலஞ்சென்ற துரைச்சாமி மற்றும் இராமையா, வசந்தமல்லிகா, கந்தையா, தனலெட்சுமி, கணபதிப்பிள்ளை (ஜேர்மன்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.05.2009 திகதி கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

L.Packirsamy
5430, Yonge Street # 201
North York Ontario
T.P. :- 0014162180301

தகவல்:
கலாபூஷணம்
L.கெங்காதரன் (ஆச்சாரி) (மைத்துனர்)
306,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். T.P. :-021 222 8415

(2750)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.05.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.